விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 09 வியாழக்கிழமை (21.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 064

## 30 வருட கால யுத்தத்தில்
# முப்படையினரால் யுத்தக் குற்றங்கள் இடம்பெறவில்லை
## முன்னாள் இராணுவத் தளபதி



(கொழும்பு) 30 வருட கால யுத்த காலத்தில் முப்படையினரால் யுத்தக் குற்றங்கள் மேற்கொள் ளப்படவில்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார். (23-ம் பக்.)

## குருநகர் பகுதி மீனவர்கள் இருவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குருநகரிலிருந்து கடலுக்குத் தொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்களைக் காணவி ல்லை என முறையிடப்பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் இரண்டு நாள்களாக கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா கடற்பரப் பில் இந்திய எல்லைக்குள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை மீனவர் கள் 25 பேர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டு தமிழக பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் இவர்கள் இருவரும் அடங்குவர் என நம்பப்படுகிறது.

பாசையூரைச் சேர்ந்த 55 வய தான லியோரி பாஸ்கரன் மற்றும் 27 வயதான எல்டின் ராஜ்பிரபு ஆகி யோரே மீன்பிடிக்கச் சென்று காணா மற்போயுள்ளனர்.

குருநகர் இறங்குதுறையில் இருந்து கடந்த திங்கட்கிழமை விசைப்படகு மூலம் 23☛

### மலையக மக்களுக்காக
## கறுப்புப் பட்டி அணிந்து வந்த வடக்கு ஆளுநர்




(யாழ்ப்பாணம்)

மலையக மக்களின் ஆயிரம் ரூபாய் கோரிக்கைக்கு ஆதரவாக வட மாகாண மக்களின் பத்து ஆயி ரம் கையொப்பத்தை திரட்டும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்குமேலும் தெரிவிக்கையில்,

ஆளுநர் என்ற ரீதியிலும் இந்த நாட்டின் குடிமகன் என்ற ரீதியிலும் தமிழன் என்ற ரீதியிலும் மலையக மக்களின் ஒரு நாளுக்கு 23☛

### போதைக்கு அடிமையானவர்களுக்கு
## புனர்வாழ்வு அளிக்கும் அதிகார சபை அமைக்க
### ஜனாதிபதி மைத்திரி நடவடிக்கை

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமை யானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பிலான இடைக் கால கட்டுப்பாட்டு சபையொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

போதைப்பொருளுக்கு எதிரான சட்ட திட்டங்கள் மற்றும் சுற்றி வளை ப்புகளின் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்படும் போதைப் 23☛

## சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக காலிங்க நியமனம்

(கொழும்பு)

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க, இந்திரதிஸ்ஸ தெரிவாகியுள்ளார்.

நேற்று நடைபெற்ற இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தேர் தலிலேயே இவர் தெரிவு செய்யப்ப ட்டுள்ளார். 23☛

### ஐ.நா தீர்மானத்தை செயற்படுத்த
## கால அவகாசம் கோர இலங்கை அரசு திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையில் இல ங்கை தொடர்பாக 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிறை வேற்றப்பட்ட 30/1 பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங் களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் கால அவகாசம் வழங்க வேண்டும் என இலங்கை கோரி க்கை விடுக்கவுள்ளது.

மனித உரிமைகளுக்கான ஐக் கிய நாடுகள் சபையின் 40வது அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகி மார்ச் 22 ஆம் 23☛

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நீக்குவதற்கு
### ஜனாதிபதி மைத்திரி இணக்கம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யும் யோசனைக்கு தான் உடன்படுவதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தெரிவித்தார்.

தரம் 5 புலமைப் பரீட்சையை இரத்து செய்வது தொடர்பில் கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது. அத்துடன், புலமைப் பரிசில் பரீட்சை கட்டாயமானது என்ற சுற்றறிக்கையும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே தரம் 5 23☛

### சிறுவர்களை பாதுகாப்பதற்கு
## தேசிய நிதியம் ஒன்று விரைவில் ஸ்தாபிக்கப்படும்
### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்வ ரும் இரண்டு வாரங்களில் தேசிய நிதியமொன்றை ஸ்தாபிக்கவுள்ளதாக 24☛



### அரசியலமைப்பை மீறுவதாக
## ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் அடிப்படை உரிமை மனுத் தாக்கல் செய்யப்படவு ள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கான நிரந்தர தலை வரை நியமிக்காமல் அரசியலமைப்பை மீறி வருகிறார் என்று குற்றம்சாட்டியே இந்த மனு தாக்கல் செய்யப்படவுள்ளது. 14 நாட்களுக்கு வரையே மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவர் ஒருவரை நியமிக்க முடியும் என்ற' 23☛

## மன்னார் புதைகுழியின் காபன் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை
### நீதிமன்றுக்கு அறிக்கை கிடைத்தவுடனேயே வெளியிட முடியும்: மன்னார் நீதிமன்றம்



(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி யின் காபன் பரிசோதனைக்கான அறிக்கை மன்னார் நீதிமன்றத்தி னூடாக நேற்று புதன்கிழமை வெளிவரும் என எதிர்பார்க்கப் பட்ட போதும் குறித்த அறிக்கை வெளியிடப்படவில்லை.

குறித்த பரிசோதனைக்கான அறிக்கை உத்தியோகபூர்வமாக மன்னார் நீதவான் நீதிமன்றத்தி ற்கு கிடைக்காத நிலையில் 23☛

## தேர்தலை நடத்தும் பொறுப்பு அரசுக்கு மாத்திரம் கிடையாது
### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு மாத்திர மல்ல, பாராளுமன்றத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் என்ற வகையில் அனைத்து பாரா ளுமன்ற உறுப்பினர் 24☛



# மங்கள சமரவீரவை நீக்கிவிட்டு
# ஊடகத்துறை அமைச்சராக ருவான் விஜேவர்தன நியமனம்?

(கொழும்பு)

அடுத்த 48 மணி நேரத்தில் ஊடகத் துறை அமைச்சராக ருவான் விஜேவர் தனவை நியமிக்க ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ஜனாதிபதி செயலகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமைய ஊடகத்துறை அமைச்சர் பதவியில் இருந்து மங்கள சமரவீரவை நீக்கி விட்டு அந்த பதவி யில் ருவான் விஜேவர் தனவை நியமிக்க தீர் மானிக்கப்பட்டுள்ளது. பிரதமரின் கோரிக் கையை அடுத்து ஜனாதிபதி ருவான் விஜேவர்தனவை அழைத்து ஊட கத்துறை அமைச்சர் பதவியை வழங்குவது குறித்து கலந்துரையாடி யுள்ளதுடன் அதனை பெற்றுக்கொள்ள ருவான் விஜேவர்தன விருப்பம் தெரி வித்துள்ளதாகவும் கூறப்படு கிறது.

எனினும் ஊடகத்துறை அமைச்சு பதவி கொஞ்சம் காரசாரமாக பேசக்கூடியவருக்கே பொருத்தமாக இருக்கும் எனவும் அது விஜே வர்தனவுக்கு பொருந்துமா? என ஜனாதிபதி கேட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

இரண்டு தரப்பின் இணக்கத் துடன் வர்த்தமானி மூலம் ஊடகத் துறை அமைச்சை ருவான் விஜேவர் தனவுக்கு வழங்கிய பின்னர், பதவி யில் சத்தியப் பிரமாணம் செய்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தக வல்கள் கூறுகின்றன. (ம-3)


பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

**ரெங்கசாமி**
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

(7602)





## நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களா?

உங்களின் ஓய்வுகாலத்தினை அனுபவிக் கும் அதேவேளை பணம் சம்பாதிப்பதை யும் தொடர இதோ ஓர் வாய்ப்பு. ஒரு கதவு மூடப்படும் போது நாம் இன்னுமொரு கதவை உங்களுக்காக திறக்கின்றோம். உங்கள் பயணத்தினை இப் பொழுதே ஆரம்பியுங்கள்.

- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து ஓய்வுபெற்றவர் களுக்கு முன்னுரிமை.
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்களும் இணைந்து கொள்ளலாம்.
- வயதெல்லை 20-60

Contact :-
62/6, Stanley Road, Jaffna.
T.P : 077 712 1868

(7611)


# 01ஆவது ஆண்டு நினைவு நாள்

## அமரர் மத்தியாஸ் மரியநாயகி (அன்னமலர்)

பிறப்பு : 13.05.1948 இறப்பு : 21.02.2018



அன்னாரின் 1ஆவது ஆண்டு நினைவு 21.02.2019 இன்று வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் அவரது உற்றார், உறவினர் நினைவு கூருகிறார் கள்.


(C-5571)

தகவல் : மருமக்கள் – லில்லி, கொலின், விஜி.
மந்துவில், 8ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

# மரண அறிவித்தல்

## திருமதி புஸ்பராணி பத்மநாதன்

பிறப்பு : 16.07.1946 இறப்பு : 20.02.2019



அரியாலையை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி பத்மநாதன் அவர்கள் 20.02.2019 புதன் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கந்தையா - இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்ன தம்பி - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மரு மகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும், அன்புமலர், இரா ஜேஸ்வரி, பாலதேவன், லலிதா மலர் ஆகியோரின் அன்பு சகோதரி யும், மதியழகி, உதயணன் (பிரதி முகாமையாளர் - மக்கள் வங்கி), மதிவதனி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஸ்ணமூர்த்தி (பிரதம செயலாளர் செயலகம், வடமாகாணம்), சைலஜா, சதீஸ் (மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அபிநாத், தனுஷாந், லஸ்மிதா, நிகோஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.02.2019 வியாழக் கிழமை இல.16, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் செம்மணி இந்துமயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு, அரியாலை.

தகவல் : குடும்பத்தினர்
(7614) 077 651 0187


## நீரிழிவு நோயா? மற்றும் அதிக உடற் பருமனா? இதோ

TEASTAR
REFRESHING THE WORLD

நிறுவனம் யாழ்ப்பாணத்தில் பலரது நிவாரணியாகவும் நம்பிக்கையையும் வென்று இப்போது உங்கள் வவுனியா நகரில்

இலவச மருத்துவ பரிசோதனைகள்
மற்றும் சிகிச்சை விளக்கங்கள்

ஆண்மை அதிகரிக்க, நீரிழிவு மற்றும் அதிக உடற் பருமனை குறைத்து ஆரோக்கியமாக வாழ மற்றும் அல்சர் நோய், மனஅழுத்தம் மற்றும் தூக்கமின்மை குறைபாடு போன்றவற்றிற்காக நாம் வழங்கிய வெற்றிகரமான எமது மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகளுடன் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**வாருங்கள் அழைத்து வாருங்கள்...**

100% இயற்கையானது, 04 வாரங்களில் தீர்வு

இடம் : நகரசபை மண்டபம், வவுனியா
காலம்: 22 & 23 (வெள்ளி மற்றும் சனி)
நேரம் : மு.ப. 9.00 முதல் பி.ப. 7.00 மணி

முற்பதிவுகளுக்கு அழையுங்கள்
0770 811 880 / 0770 812 666

(C-5573)

## “நாட்டு மக்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்காதே”

# பயங்கரவாத சட்டங்களுக்கு எதிராக

# கிளிநொச்சியில் மக்கள் போராட்டம்








(கிளிநொச்சி)

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பனவற்றை எதிர்த்து கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மக்கள் கிளிநொச்சியில் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சி மக்களின் ஏற்பாட்டில் பழைய மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. குறித்த போராட்டம் ஏ-9 வீதியால் டிப்போ சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் காணப்படும் பாதகமான விடயங்கள் தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் கோஷமிட்டனர்.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்கள்,

நாட்டில் யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும்.

இந்த நிலையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றி நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சர்வதேசத்தை ஏமாற்றும் நோக்கில் குறித்த சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்திலும் மக்களை மோசமாக பாதிக்கக் கூடிய சரத்துக்கள் உள்ளன.

எனவே எமக்கு இந்தச் சட்டம் வேண்டாம் எனத் தெரிவித்தனர். இவ்வாறான சட்டம் நடைமுறையில் இருந்ததால் தான் எமது உறவுகள் தொடர்ந்தும் அரசியல் கைதிகளாக சிறையில் உள்ளனர்.

எனவே பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திலும் தொடர்ந்தும் அவர்கள் சிறையில் வாட வழிவகுக்கும் எனவும் தெரிவித்தனர். எனவே இந்தச் சட்டத்தை முழுமையாக அகற்ற வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ)

## உழவியந்திரம் மோதித்தள்ளி ஆசிரியர் ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

மணல் ஏற்றிவந்த உழவியந்திரம் மோதித் தள்ளியதில் பாடசாலை சென்று கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் புதன்கிழமை காலை 7.15 மணியளவில் குடத்தனை ஆறாம்கட்டைச் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அம்பன் அ.மி.த.க. பாடசாலையில் கல்வி கற்பிக்கும் துன்னாலை, கரவெட்டியைச் சேர்ந்த திருமதி கனகேஸ்வரன் பாலசுதாஜினி (வயது- 44) என்ற ஆசிரியரே படுகாயமடைந்தவராவார்.

பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த போது மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் ஆசிரியையை மோதி தூக்கி எறிந்துள்ளது. இதில் படுகாயமடைந்த ஆசிரியை உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (இ-60)

**வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை**

**Special Treatment for Rheumatism**

கழுத்தும்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த-ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (Ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
24
04
1946



உதிர்வு
22
01
2019

## அமரர் இராசலட்சுமி தவராசா

*ஊருக்கு ஒன்று என்று அறிந்தவுடன்*
*நேருக்கு நின்று உதவுவீர்கள்!*
*வேருக்கு ஆணிவேர் போன்றும்*
*தேருக்கு அச்சாணியாயும் இருந்து*
*பாருக்குள் நிகர் உங்களுக்கு*
*யாருமில்லை நாம் உணர்வோம்!*
*காரிருளில் எம்மை தவிக்க விட்டு*
*பேருலகம் சென்றீர்களோ அம்மா*

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

வீட்டுக்கிருத்திய கிரியைகள் 21.02.2019 இன்று வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(7584)

இல.11, சென்மேரிஸ் 2 ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

# லாரஸ் விருது வென்றார் ஜோகோவிச்

சிறந்த வீரருக்கான லாரஸ் விருதை செர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச் வென்றார்.

மொனாகோவை சேர்ந்த தனியார் அமைப்பு சார்பில் சிறந்த விளையாட்டு நட்சத்திரங்களுக் கான உலக 'லாரஸ்' விருது கொடுக்கப்படு கிறது. இது விளையாட்டிற்கான ஒஸ்கார் விருது என அழைக்கப்படுகிறது. கடந்த ஆண்டு செயற்பாட்டின் அடிப்படையில் தேர்வு செய் யப்படுவர்.

இம்முறை. சிறந்த வீரருக்கான விருதை செர்பிய டென்னிஸ் நட்சத்திரம் நோவக் ஜோகோவிச் தட்டிச்சென்றார். கால்பந்து வீரர் களான பிரான்ஸின் எம்பாப்வே, குரோஷியா வின் லூகா மாட்ரிச் உள்ளிட்டோரை முந்தி னார்.

கடந்த விம்பிள்டன், யு.எஸ்..ஓபன். அவுஸ் திரேலியா (2019) என தொடர்ந்து மூன்று கிராண்ட்ஸ்லாம் வென்றதால் விருதை கைப்பற்றினார். இந்த விருதை அதிக முறை (4 முறை. 2012, 15, 16, 18) வென்ற வீரர்கள் பட்டியலில் ஜமைக்கா தடகள ஜாம்ப வான் போல்ட்டுடன் பகிர்ந்து கொண்டார். முதலிடத்தை சுவிட்சர்லாந்து டென்னிஸ் வீரர் பெடரர் (6) வகிக்கிறார்.

**சிமோனாவுக்கு கௌரவம்**

சிறந்த வீராங்கனை விருதை அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் நட்சத்திரமான சிமோனா பைல்ஸ் வென்றார். உத்தேச பட்டியலில் இடம்பெற்றிருந்த ஹலப் (ருமேனியா). ஜேர் மனியின் கெர்பர் (டென் னிஸ்) ஏமாற்றம் அடைந்தனர். கடந்த ஆண்டு டோகாவில் நடந்த உலக சம்பியன்ஷிப்பில் சிமோனா 4 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் வசப்படுத்தி இருந்தார். இதை கௌரவிக்கும் விதமாக தற்போது விருது கிடைத்துள்ளது. இரண்டாவது* முறையாக (2017. 19) விருதை வசப்படுத்தி உள்ளார்.

சிறந்த அணிக்கான விருதை கடந்த ஆண்டு உலக கிண்ணம் வென்ற பிரான்ஸ் கால்பந்து அணி தனதாக்கியது. தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியன் லீக் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிய ரியல் மட்ரிட் கழக அணியின் விருது கனவு கலைந்தது.

மீண்டு வந்த நட்சத்திரத்திற்கான விருதை அமெரிக்க கோல்ப் வீரர் டைகர் வுட்ஸ் கைப்பற்றினார். கடந்த ஆண்டு முதுகுதண்டு பகுதியில் 'ஆப்பரேஷன்' செய்து கொண்ட இவர் மீண்டு வந்தார். பின், அமெரிக்க டூர் சம்பியன்ஷிப்பில் கிண்ணம் வென்றார். இதனால், இவ ருக்கு விருது கொடுக்கப்பட்டுள்ளது.

**ஒசாகாவுக்கு விருது**

திருப்புமுனை கண்ட நட்சத்திரம் விருதை ஜப்பான் டென்னிஸ் வீராங்கனை ஒசாகா வென்றார். கடந்த யு.எஸ்., ஓபன் பைனலில் செரினாவை வீழ்த்திய இவர், கிராண்ட்ஸ் லாம் பட்டம் வென்ற முதல் ஜப்பான் வீராங் கனையானார்.



விருது வென்ற பூரிப்பில் ஜோகோவிச்

# சௌதி ஆறு... நியூசிலாந்து ஜோரு!

## வீணானது சபிரின் நூறு

ரிம் சௌதி ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றி அசத்த, பங்களா தேசுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 88 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி 3-0 என்ற கணக்கில் தொடரை ஜோராக கைப்பற்றியது.

நியூசிலாந்து சென்றுள்ள பங்களாதேஷ் அணி, அங்கு 3 போட்டிகள் போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்றது. முதல் இரு போட்டிகளில் வென்ற நியூசிலாந்து தொடரை கைப் பற்றியது. இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 3ஆவதும் இறுதியுமான ஒரு நாள் போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

**ரெய்லர் அபாரம்**

நியூசிலாந்து அணிக்கு கப்டில் (28), முன்ரோ (8) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. நிகோல்ஸ் (64), ரொஸ் டெய்லர் (69), அணித் தலைவர் லெதாம் (59) கைகொடுத்தனர். நீஷம் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

50 ஓவர்கள் நிறைவில் நியூசிலாந்து அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 330 ஓட்டங்களை குவித்தது.

**சபிர் போராட்டம்**

கடின இலக்கைத் துரத்திய பங்களாதேஷ் அணியின் 'ரொப் ஓர்டர்' வரிசையாக மட்டை யானது. தமிம் இக்பால், சௌமியா 'டக்' அவுட் டாக, லிட்டன் தாஸ் ஒரு ஓட்டம் எடுத்தார். மூவரையும் சௌதி வெளியேற்றினார். சபியு தீன் (44) ஆறுதல் தர, சபிர் ரஹ்மான் (102) சதம் அடித்தார்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 47.2 ஓவர்களில் 242 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்தது. இதன்மூலம் ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றியது.




வெற்றிக் கிண்ணத்துடன் நியூசிலாந்து அணி



6 விக்கெட்டுக்களை கைப்பற்றி பங்களாதேஷின் துடுப்பாட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்ட நியூசிலாந்தின் சௌதி

**ரெய்லர் 'நம்பர் 1'**

இப்போட்டியில் 69 ஓட்டங்கள் எடுத்த ரொஸ் ரெய்லர், 51ஆவது ஓட்டத்தை எட் டிய போது. ஒருநாள் அரங்கில் அதிக ஓட் டங்கள் எடுத்த நியூசிலாந்து வீரர்களில் ஸ்ரீபன் பிளமிங்கை (8,007 ஓட்.,) முந்தி 'நம்பர் 1' இடம் பெற்றார். இவர் 218 போட்டி களில் 20 சதம், 47 அரைச்சதம் உட்பட 8,026 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

தவிர, ஒருநாள் போட்டி வரலாற்றில் அதிவேகமாக 8000 ஓட்டங்களை எட்டிய வீரர்கள் பட்டியலில் 4ஆவது இடம் பிடித்தார். இவர். 203 இன்னிங்சில் இம்மைல் கல்லை அடைந்தார்.

முதல் மூன்று இடங் களில் முறையே இந்தியாவின் விராட் ஹோலி (175 இன் னிங்ஸ்), தென்னாபிரிக்காவின் டி வில்லி யர்ஸ் (182), இந்தியாவின் சௌரவ் கங் குலி (200) ஆகி யோர் உள்ளனர்.




4 விக்கெட்டுக்களை கொய்த ஸ்கொட்லாந்தின் எவன்ஸ்

## தூள் தூளான ஓமான்

ஸ்கொட்லாந்துக்கு எதிரான முதல் ஒரு நாள் போட்டியில் சொதப்பிய ஓமான் அணி வெறும் 24 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஓமான் சென்றுள்ள ஸ்கொட்லாந்து அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி மஸ்கட்டின் அல் அமராத் தில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற ஸ்கொட்லாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

சொந்த மண்ணில் ஓமான் அணி ஆரம்பத்தி லேயே தடுமாறியது. ஜாடிந்தர் சிங், டுவிங்கள் பண்டாரி டக் அவுட்டாகினர். ருதாரி ஸ்மித் 'வேகத்தில்' மிட்சல் (0), குர்ராம் நவாஸ் (1) ஆட்ட மிழந்தனர். கவார் அலி மட்டுமே (15) இரட்டை இலக்கை எட்டினார்.

ஓமன் அணி 17.1 ஓவர்களில் 24 ஓட்டங்க ளுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் ஸ்கொட்லாந்து சார்பில் ருதாரி, எவன்ஸ் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

சுண்டங்காய் இலக்கை விரட்டிய ஸ்கொட்லாந்து அணிக்கு மத்யூ கிராஸ் (10*), அணித் தலைவர் கோட்சர் (16*) கைகொடுத்தனர்.

ஸ்கொட்லாந்து அணி 3.2 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 26 ஓட்டங் கள் எடுத்து 10 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

# விண்வெளிக்கு செல்கிறது ராவணா-1




(கொழும்பு)

ராவணா-1 என்று பெயரிடப்பட்ட முதலாவது ஆய்வு செய்மதியை இலங்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் விண்வெளிக்கு அனுப்பவுள்ளதாக, ஆதர் சி கிளார்க் நிறுவகம் தெரிவித்துள்ளது.

மிகச் சிறியளவிலான, சதுர வடிவத்தில் அமைந்த இந்த செய்மதியை, ஆர்தர்சி கிளார்க் நவீன தொழில் நுட்ப நிறுவகத்தைச் சேர்ந்த இளம் ஆய்வுப் பொறியாளர்களான தரிந்து தயாரத்னவும், துலானி சாமிக்கவும் இணைந்து உருவாக்கியுள்ளனர்.


1.1 கிலோ எடையும், 1000 கியூபிக் சென்ரி மீற்றர் அளவும் கொண்ட இந்த செய்மதி, ஜப்பானின் யூஷ தொழில்நுட்ப நிறுவகத்தில் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

ராவணா-1 எனப் பெயரிடப்பட்ட இந்த செய்மதி, ஜப்பானின் விண்வெளி கண்டுபிடிப்புக்கள் முகவர் அமைப்பால், கடந்த 18 ஆம் திகதி அதிகாரபூர் வமாக கையளிக்கப்பட்டது.

இது அமெரிக்காவின் சைனஸ்-1 விண்வெளி ஓடத்தின் மூலம், அனைத்துலக விண்வெளி நிலையத்துக்கு ஏப்ரல் 17 ஆம் திகதி அனுப்பப்படவுள்ளது. இந்த செய்மதி, இலங்கை மற்றும் அதனைச்சுற்றியுள்ள பிராந்தியங்களைப் படம் பிடித்தல் உள்ளிட்ட 5 பணிகளை மேற்கொள்ளும்.

இது பூமியிலிருந்து 400 கிலோமீற்றர் தொலைவில் விண்வெளியில் நிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறைந்தது ஒன்றரை ஆண்டுகளுக்கு செயற்படக் கூடும் என்று நம்பப்படுகின்ற போதும், இந்தச் செய்மதி, 5 ஆண்டுகள் வரையும் தொழிற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)



இந்த வருடத்திற்குள் இரண்டு தடவைகள் சுப்பர் மூன் இனை பார்வையிடும் சந்தர்ப்பம் இலங்கையர்களுக்கு கிட்டியுள்ளது.

இதற்கமைய நேற்று முன்தினம் சாதாரண நாட்களை விட 14 மடங்குகள் பிரகாசமாகவும், 6 மடங்குகள் பெரிதாகவும் சந்திரன் தென்பட்டது.

# குளிர்சாதனப் பெட்டியில் நுளம்புப் பெருக்கம்

## ஆறு பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்குப் பிரதேசத்தில் குளிர்சாதனப் பெட்டிகளில் நுளம்புப் பெருக்கத்தை ஏற்படுத்தியவர்களுக்கெதிராக கடந்தவாரம் யாழ்.நீதவான் நீதிமன்றில் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாக உரும்பிராய் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தி.நிறூபன் தெரிவித்தார்.

அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் பின்பற்றாது குளிர்சாதனப் பெட்டியின் பின்புறத்தில் நீர் வெளியேறும் பகுதியில் நீரைத் தேக்கி வைத்து நுளம்புப் பெருக்கத்தை ஏற்படுத்தியவர்களுக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இருவர் கைது

(கொழும்பு)

தெனியாய பகுதியில் இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் இருவரை கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெனியாய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொலவெனிகம பகுதியில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின் போது இரண்டு உள்நாட்டு துப்பாக்கிகளுடன் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-60)


27 ஆவது நினைவஞ்சலிகள்

மலர்வு 18 06 1920

மறைவு 19 02 1992



அமரர் இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி:- 21.02.2019 (துதியை)

ஆண்டுகள் இருபத்தேழு ஆனாலும் உங்கள் நினைவுகள் என்றும் பசுமையானவை. உங்கள் உன்னதமான ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

"சுபசதனம்"
செம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உங்கள் குடும்பத்தினர்: மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(7501)

அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 23.01.2019 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்ப தலைவர்



அமரர் சிற்றம்பலம் இராசநாயகம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 22.02.2019 வெள்ளிக்கிழமை அதிகாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்மவாசம்
கரணவாய் மத்தி, கரவெட்டி.

(C-5560)

இங்ஙனம்
குடும்பத்தினர்.


# இராசி பலன்

**மீனம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும் வாய்ப்புண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கலாம்.

**மேடம்:** இலாப நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உடல் நலனில் முன்னேற்றமுண்டு.

**இடபம்:** மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும் நாள்.

**மிதுனம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வாகன யோகத்தால் வளம் காணும் நாள்.

**கும்பம்:** மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்ப பொறுப்புகள் கூடும் நாள், மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

இராசி பலன் — கிரகநிலை

செவ் | ராகு | சூரி. புத | சந் | சனி, கேது, சுக் | குரு

சந்திராஷ்டமம் சதயம் மதியம் 1.02 மணிக்கு கன்னி-சந்

**21.02.2019**

மாசி 09, வியாழக்கிழமை

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

துதியை பிற்பகல் 5.35 மணிவரை

பூரம் காலை 7.51 மணிவரை

உத்தரம் பின்னிரவு 6.26 மணிவரை

சுபநேரம் 8.01-9.31 மணிவரை

இராகுகாலம் 2.01-3.31 மணிவரை

திருவள்ளுவர் குருபூசை

வளவன்

**கடகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய கற்பனைகள் தோன்றும், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், விருந்தினர் வருகை விருப்பத்தை நிறைவேற்றும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.

**துலாம்:** பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.

**கன்னி:** தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.



கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் திருக்கோவிலில் நேற்று முன்தினம் மாசி மக உற்சவம் இடம்பெற்றது. (படங்கள்:-ப.சிவசங்கர்)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(பொற்பதி)

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வெற்றிலைக்கேணி நம்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் அதிபர் த.செல்லக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா பிரதம விருந்தி னராகவும் மருதங்கேணி பிரதேச செயலக நிர்வாக உத்தி யோ கத்தர் பா.மேகவண்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (5-64)

(யாழ்ப்பாணம்)

புத்தூர் நவக்கிரி அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதிபர் த.இராதாகிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்குமார் கலந்து கொள்வார். (5-10-134)

### 10 இலட்சம் ரூபா பெறுமதியான
## சாவகச்சேரி கொள்ளையின் பிரதான சூத்திரதாரி கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகிலுள்ள உணவகத்தில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்திற்கு திட்டம் தீட்டி மூளையாகச் செயற்பட்ட பிரதான சூத்திரதாரியை நேற்று முன் தினம் நள்ளிரவு சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர். குறித்த கொள்ளையின் சூத்திரதாரி கொள்ளை இடம் பெற்ற உணவகத்தில் சில மாதங்களுக்கு முன்னர் பணியாற்றியவர் என்பதோடு கொள்ளைச் சம்பவத்திற்கான நேரம் மற்றும் திட்டத்தை தீட்டி தனது சகோதரர் மூலம் கொள்ளையை மேற்கொண்டுள்ளார் என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் குறித்த உணவகக் கூரையை பிரித்து உள் நுழைந்த கொள்ளையர் சுமார் ஏழு இலட்சம் ரூபா பணம், மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என்பவற்றை கொள்ளையிட்டிருந்தனர். இக்கொள்ளை தொடர்பில் தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் உணவக உரிமையாளரின் உதவியுடன் கிளிநொச்சி உடையார்கட்டு பகுதியில் மறைந்திருந்த ஒருவரை கடந்த 18 ஆம் திகதி கைது செய்திருந்தனர். கைது செய்யப்பட்டவரிடம் மேற்கொண்ட விசாரணையைத் தொடர்ந்து மட்டுவில் பகுதியைச் சேர்ந்த கொள்ளையின் பிரதான சூத்திரதாரியும் கொள்ளையரின் சகோதரரான ஒருவரை கைதுசெய்துள்ளனர். மேற்படி கொள்ளை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரே தொடர்ச்சியான புலன் விசாரணைகளை மேற்கொண்டு கொள்ளையர்களை கைது செய்துள்ளனர். மேலும் கொள்ளையர்கள் திருடிய பணத்தில் வாங்கிய பெறுமதியான பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதோடு கைதானவர்களுக்கு வேறு கொள்ளைச் சம்பவங்களோடும் தொடர்பிருக்கின்றதா? என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-30-89)




## திறன் வகுப்பறைத் திறப்பு விழா

யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் திறன் வகுப்பறைத் திறப்பு விழா இன்று 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியளவில் அதிபர் திருமதி.கௌரி சேதுராஜா தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக ந.வாணிதாசன் (லண்டன்) கலந்து கொள்வார். (5)

## வடக்கு ஆளுநர்- கட்டளைத் தளபதி சந்திப்பு



யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சிக்கும் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக்காலை ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. (இ-7)

## திட்டங்களை விரைவுபடுத்தத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யும் நோக்கில் கடந்த வருடம் முடிவுறாத்திட்டங்களையும் இவ் ஆண்டுத்திட்டங்களையும் விரைவுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக யாழ். மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 2018 செயற்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிதி பற்றாக்குறையாகவுள்ளதால் இவ்வாண்டு 2019 ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து குறித்த திட்டங்களைப் பூரணப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இத் திட்டங்களில் கொத்தாவளை வாய்க்கால் திட்டம் 37 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்க எதிர்பார்த்த போதும் கடந்த வருடம் 20 மில்லியன் ரூபாய் மட்டுமே கிடைக்கப் பெற்றது எனவும் சங்கானை வழுக்கி ஆறு திட்டத்திற்கு 100மில்லியன்ரூபாய் எதிர்பார்க்கப்பட்ட போது 25 மில்லியன்ரூபாவே கிடைக்கப் பெற்றதாகவும் தெரிவித்தார்.

தொண்டைமானாறு கடல் நீர் ஏரியை அண்டிய அச்சுவேலிப் பிரதேசத்தில் வெள்ளம் புகுவதால் அப் பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அதேபோல வல்வை தொடக்கம் வாதரவத்தை மற்றும் கரவெட்டி வயல் பிரதேசம் ஆகியவற்றிலும் வெள்ளம் உட்புகுகின்ற நிலை காணப்படுகின்றது.

இந் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு இவ் வருடம் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து வெள்ளம் உட்புகும் பகுதிகளில் வெள்ளத் தடுப்பு அணைகளை அமைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-10)

## சட்டக்கல்லூரிக்கு விண்ணப்பம் கோரல்

க.பொ.த உயர்தரப்பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களை அடுத்த வருடம் (2020) சட்டக்கல்லூரிக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியான விண்ணப்பதாரிகள் எதிர்வரும் மார்ச் மாதம் 22 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் இலங்கைச் சட்டக் கல்லூரி, இல.244, புதுக்கடை வீதி, கொழும்பு- 12 என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும். மேலதிக விபரங்களை www.sllc.lk என்ற இணை யத்தள முகவரியில் பார்வையிட முடியும். (இ-10)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், பிரம்படி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நிலைய மண்டபத்தில் தலைவர் இ.செல்வராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம சேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5)

## விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடல்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் 2018 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 2019 இல் 2 ஆம் தடவையாக மீளத் தோற்றவுள்ள மாணவர்கள் இன்று 21.02.2019 வியாழக்கிழமை மற்றும் நாளை 22.02.2019 வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் பாடசாலைக்கு சமுகமளித்து விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிடுமாறு பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (இ



கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியின் கலைப்பிரிவு மாணவன் எம்.எம்.கேசரனின் "கொடிகாமம் பெண்ணே" இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் கல்லூரி ஆசிரியர் திருமதி. இராகினி விஜயரத்தினம் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்வி சங்கீத பாட ஆசிரியர் ஆலோசகர் திருமதி. புனிதகுமாரி ஈழநேசன், கொடிகாமம் மத்திய கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உழவர் சந்தை ஆரம்பித்து ஒளியூட்ட வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உடனடியாக உழவர் சந்தையை ஆரம்பித்து பிரதேச ஏழை விவசாயிகளின் வாழ்வில் ஒளியூட்ட வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் சபையில் பிரேரணை முன்வைத்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி சாவகச்சேரி நகரசபையின் மாதாந்த அமர்வு உப தவிசாளர் அ.பாலமயூரன் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி பொதுச் சந்தையைப் பொறுத்தமட்டில் உழவர் சந்தை ஆரம்பிப்பதென்பது தொடர் கதையாகவே உள்ளது. அநேக தடவைகள் சபையில் இவ் விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டும் உழவர் சந்தை எம்மக்களுக்கு கிடைப்பதில் எமது சபையானது கையாலாகாத நிலையில் இருப்பதை நோக்க முடிகிறது.

சாவகச்சேரியைச் சூழவுள்ள அல்லாரை, கச்சாய், கல்வயல், கிராம்புவில் மற்றும் மட்டுவில் போன்ற கிராமங்களில் கணிசமான பயிர்கள் பயிரிடப்படுகின்றன.

விவசாயிகள் வியர்வை சிந்தி, உற்பத்தி செய்யும் தமது விளை பொருட்களை உரிய முறையில் சந்தைப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை தொடர்கின்றது.

இவ் ஏழை விவசாயிகள் தமது உழைப்பை இடைத்தரகர்களுக்கு தாரைவார்க்கும் நிலை தான் சாவகச்சேரி பொதுச் சந்தையில் இடம்பெறுகிறது.

ஆகவே மேலும் காலம் தாழ்த்தாது சாவகச் சேரி சந்தையில் உழவர் சந்தையை ஆரம்பித்து பிரதேச ஏழை விவசாயிகளின் வாழ்கையில் ஒளியூட்ட வேண்டுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார். (5-30)

# கங்காராம பெரஹராவில் மைத்திரி-மகிந்த பங்கேற்பு



(கொழும்பு)

கொழும்பு, கங்காராம விகாரையின் பெரஹராவில் நேற்று முன்தினம் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலை வர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்துகொண்டனர்.

துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சர் சாகல ரத்நாயக்கவும் இதில் கலந்து கொண்டார். (இ-7)



# வடக்கு, தெற்கு மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஜனாதிபதி ஐ.தே.கவிலிருந்தே வருவாராம்

## அஜித் பெரேரா கூறுகிறார்

வடக்கு மற்றும் தெற்கு மக்களின் விருப்பத்தை வென்றெடுக்கக்கூடிய ஜனாதிபதி ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியால் மாத்திரமே தெரிவு செய்ய முடியும்.

சகல இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி தேர்ந்தெடுத்துள்ளதாக டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது அனைவரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கே தமது விருப்பத்தை வெளியிட்டு வருகின்றனர். பிரதான கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகி வருகின்றன.

இந்நிலையில் தனித்த இனம், பிரதேசம் மற்றும் மதம் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைய முடியாது. தனி ஒரு இனத்தவர்களின் ஒத்துழைப்பைன பெற்றுக் கொள்வதும் வெற்றிக்கு சாதகமாக அமையாது.

நமது நாட்டின் தேர்தல் நடைமுறைகளுக்கு அமைவாக அனைத்து இன, பிரதேச மற்றும் மதங்களை பிரதிநிதித்துவப்படுத்த கூடியவர்களே ஜனாதிபதி தேர்தலில் வெற்றிகண்டுள்ளனர்.

எனவே இடம்பெற வுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிர்த்தரப்பினர் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்தினாலும் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேட்பாளரை ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்தே தெரிவு செய்ய முடியும். வடக்கு மக்களையும் தெற்கு மக்களையும் ஒன்றிணைக்க கூடிய சிறந்த தலைவர்களும் எம்மிடமே உள்ளனர்.

இரட்டை குடியுரிமையுடைய ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்காது என அவர் மேலும் தெரிவித்ததார். (இ-7)

# வாக்காளர் இடாப்பு தயாரிப்பு அடுத்த மாதம் முன்னெடுப்பு

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பைத் தயாரிக்கும் பணிகளை தேர்தல்கள் திணைக்களம் அடுத்த மாதம் முன்னெடுக்கவுள்ளது.இதற்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்தப்படவுள்ளது.

பதிவு செய்யப்பட்ட கட்சிகளைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவருக்கு இது தொடர்பில் தொடர்புகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ரஷிக பீரிஸ் தெரிவித்தார்.

இதன் பின்னர் கிராம உத்தியோகத்தர்களை தெளிவுபடுத்தி வாக்காளர் களுக்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2019ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பை உறுதி செய்யும் தினம் மற்றும் ஏனைய தினங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

2018ஆம் ஆண்டு உறுதி செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பு நடைபெறவுள்ள தேர்தலுக்கு பயன்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# தாய்லாந்தின் புதிய அரசருக்கு மைத்திரி மரக்கன்று அன்பளிப்பு



(ரங்கூன்)

தாய்லாந்தின் 10 ஆவது அரசராக மே மாதத்தில் முடி சூடவுள்ள மகா வஜீர லங்கோன் இளவரசருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாழ்த்துக்களை தெரிவித்துள்ளதுடன், புனித ஜயஶ்ரீ மகா போதி அரச மரக்கன்றொன்றும் பரிசாக வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி சார்பில் அரச மரக்கன்றை தாய்லாந்துக்கு கொண்டு சென்ற புத்த சாசன மற்றும் வடமேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா, தாய்லாந்து இளவரசருக்கு ஜனாதிபதி சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் அரச மரக்கன்றையும் நேற்று முன்தினம் கையளித்தார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இந்நிகழ்வில் கலந்து கொள்வதாக முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் ஜனாதிபதி மைத்திரி பங்கேற்கவில்லை. தாய்லாந்து மற்றும் இலங்கைக்கு இடையிலான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுவூட்டும் வகையிலும் தேரவாத புத்த தர்மத்தை பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கையாக இந்நிகழ்வு கருதப்பட்டதுடன், முடி இளவரசருக்கு இராஜதந்திர ரீதியில் கிடைத்த முதல் பரிசு இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் ஓ சா மற்றும் அமைச்சர் காமினி ஜெய விக்ரம பெரேரா உள்ளிட்ட அந்நாட்டு விசேட பிரதி நிதிகளின் பங்களிப்பில் குறித்த அரச மரக்கன்று தாய்லாந்தின் அயோத்யா நகரில் அமைந்துள்ள வஜிர தம்மாராம விகாரையில் நடப்பட்டது. (இ-7)

# இலங்.அரசாங்கத்துக்கு பிரான்ஸ் 75 மில்லியன் யூரோ கடன் உதவி

(கொழும்பு)



இலங்கை அரசாங்கத்துக்கும் - பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் French Agency for Development (AFD) பிரிவுக்குமிடையில் 75 மில்லியன் யூரோ கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இரத்மலானை மொரட்டுவ பகுதிகளில் கழிவுநீரை அகற்றுவதற்கான திட்டத்தின் முதற்கட்டத்தில் இரண்டாவது பிரிவு நடவடிக்கைக்காக இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இந்த உடன்படிக்கையில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க மற்றும் பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் பிரிவின் இலங்கைக்கான பணிப்பாளரும் இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவருமான மார்டின் பேரன்ட் (Martin Parent) ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந் நிகழ்வு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சில் இடம்பெற்றது. (இ-7)


# கல்யாணமாலை


## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பரணி செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/L, France<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: B/9336 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: B.Sc, M.Sc, Lecturer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/9376 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 3<br>கி.பா: 34<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L, Senior Ref London<br>எதிர்பார்ப்பு: Dentist, Physiotherapist<br>தொ.இ: B/9342 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:B.Sc, Reading M.Sc, Engineer<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, வெளிநாடு<br>தொ.இ: G/9378 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 12 1/4செவ் 12 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L, Qatar<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ: B/9344 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 04<br>உயரம்: 5'தகைமை/தொழில்:O/L, சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: சொந்த நிரந்தர தொழில்<br>தொ.இ: G/9382 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 16 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:CIMA , Bank<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், வங்கி<br>தொ.இ: B/9346 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் சொந்த தொழில்<br>தொ.இ: G/9384 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# திருவள்ளுவப் பெருந்தகையின் குருபூசைத்தினம் இன்று

உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் படைத்த உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைபெறச் செய்த திருவள்ளுவருடைய குருபூசைத் தினம் தமிழ் மாசி 9 ஆம் திகதி (21/02/2019) வியாழக்கிழமை இன்று இலங்கை உட்பட உலக நாடெங்கிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. திருக்குறளை இயற்றிய வள்ளுவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர்.வாழ்வின் ஒளிவிளக்காக திகழும் திருக்குறள் தமிழ்மொழிக்கும். தமிழ் இனத்துக்கும் கிடைத்த ஓர் அரிய கருவூலமாகும். இரண்டடியாலே கவியமைத்தவர் வள்ளுவர். எம் அன்னை தமிழ் மொழியில் காலத்துக்குக் காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணம் உள்ளன. அவற்றுள் காலவோட்டத்தால் மறைந்தன சில உண்டு. காலத்தை வென்று வாழும் சிறப்புக்குரிய சிலவுமுண்டு. அத்தகைய சிறப்




புக்குரிய நூலாகப் போற்றப்படுவது திருக்குறள் ஒன்றேயாகும். திருக்குறளில் இப்பண்பு அமைந்துள்ளதைக் கண்ட மகாகவி பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து

வான்புகழ் கொண்ட தமிழ் நாடு" என்று பாடினார்.

காலத்தை வென்று வாழும் இந்நூல் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக் குரியது. திருமால் தன் ஈரடிகளால் உலகளந்தார் என்றுரைப்பர் புராண வித்தகர்கள். ஆனால் திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை அறிந்துள்ளார் என்றால் மிகையாகாது.

"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்

குறுகத் தரித்த குறள்" என்று ஔவைப்பிராட்டி மிக அழகாக கூறுகின்றார். திருக்குறளில் 133 அதிகாரங்கள் உண்டு. ஒவ்வொரு அதிகாரமும் பத்துக்குறள்களைக்கொண்டன. ஒவ்வொரு குறளும் இரு வரிகளாலானது. திருக்குறளை பொய்யாமொழி, பொதுமறை, முப்பால், தெய்வநூல் என பல வேறு பெயர்களால் அழைக்கின்றார்கள். வள்ளுவர் பெருந்தகையை தெய்வப் புலவர், செந்நாப் போதர், பெருநாவலர், நான்முகனார், பொய்யில் புலவர் எனப்பலபெயர்களால்அழைக்கின்றார்கள். பொய்யாமொழியின் பொன்னாரத்தை

"வள்ளுவர் பாட்டின் வளம் உரைக்கின் வாய் மடுக்கும்

தென் அமுதின் தீன் சுவையும் ஒவ்வாதால் - தென் அமுதம்

உண்டு அறிவார்தேவர் உலகு அடைய உண்ணுமால்

வன் தமிழின் முப்பால் மகிழ்ந்து" என்று ஆலங்குடி வங்கனார் புகழாரம் செய்கின்றார்.

திருக்குறளில் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளன. இந்நூல் அறநூலாகவும் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கின்றது. மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழியிதுவென வையகத்தாருக்கு வள்ளுவர் வழிகாட்டுகின்றார். அவரது குறள்கள் ஒவ்வொன்றும் மனிதவாழ்க்கையை செம்மைப்படுத்துவனவாகவே அமைகின்றன. அறத்துப்பாலில். இல்வாழ்க்கை எனும் அதிகாரத்தில்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்" (குறள் -50) என்கிறார் வள்ளுவர்.

அதாவது உலகத்தில் வாழவேண்டிய முறைப்படி வாழ்பவன், இவ்வுலகத்தில் வாழ்பவனாயினும் தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான் என்கின்றார்.

காமத் துப்பாலில், கற்பு இயல் அதிகாரத்தில் புணர்ச்சி விதும்பலில்

"மலரினும் மெல்லிது காமம், சிலர் அதன்

செவ்வி தலைப்படுவார்" (குறள்-1289)


அதாவது எல்லாவற்றிலும் மெல்லியதாகிய பூவினும்மெல்லிய தாயிருக்கும் காமம். அதன் பயனைப் பெறுவார் உலகில் சிலரே எனக் கூறுகின்றார்.

வள்ளுவரின் பின் வந்த புலவர்கள் யாவரும் அவரது கருத்துக்களைத் தத்தம் பாக்களில் புகுத்தியுள்ளமையைக் காண்கின்றோம். ஒரு நாட்டுக்கோ, ஒரு மொழிக்கோ, ஓர் இனத்துக்கோ உரியதல்ல திருக்குறள். அது உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை ஒன்றுபடுத்தவல்லது. அத்தகைய சிறப்புக்குரிய நூலை எந்தநாளும் போற்றிக் கற்பதே எம் பணியாக அமைதல் வேண்டும். உலக மாந்தர்கட்கு வழிகாட்டும் தமிழ் மறையாக விளங்கும் திருக்குறளை ஓதியின்புறுவதே எமது கடனாகும். புலவர் போற்றும் புலவராக வள்ளுவர் விளங்கு கின்றார். அவர் படைத்த குறள் உள்ளவரை அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை.

உலக பொதுமறை நூலின் ஊடாக பெருநாவலர் 'உலக இலக்கிய அரங்கில் தமிழர்களை பெருமிதம் கொண்டு நெஞ்சில் நிமிர நிற்கும்படி செய்த உன்னத படைப்பாளி என்று கூறினால் மிகையாகாது.

கந்தையா
கனகசபை
சண்டிலிப்பாய்

## திடீரென காணாமல் போன 2 வயதுச் சிறுவன் மீட்பு!



(அக்கரப்பத்தனை )

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோல்புறூக் லோவர் கிரன்லி தோட்டத்தில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் காணாமல் போன 2 வயதுடைய சிறுவன் நேற்றுக் காலை 9 மணியளவில் தேயிலை மலைப்பகுதியிலிருந்து பிரதேசவாசிகளால் மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவனும்நேற்று முன்தினம் மாலை தனது வீட்டில் விளையாடிக் கொண்டிருக்கும் போது, திடீரென காணாமல் போயிருந்தான்.

நேற்று முன்தினம் இரவு வரை சிறுவனை மீட்கும் பணியில் பொலிஸாரும், பிரதேசவாசிகளும், தலவாக்கலை விசேட அதிரடிப் படையினரும் ஈடுபட்டிருந்தனர்.

இரவு வரை தேடியும் கிடைக்காத நிலையில் நேற்றுக் காலை பிரதேசவாசிகள் அப்பகுதி தேயிலை மலைகளில் தேடும் போது சிறுவனின் வீட்டிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில் தேயிலை மலைப்பாதையில் குறித்த சிறுவன் மீட்கப்பட்டுள்ளான்.

தேயிலை மலை பாதையில் குறித்த நபர் ஒருவர் சிறுவனை விட்டுச் செல்வதை கண்ட பிரதேச வாசிகள் குறித்த நபரை துரத்திப் பிடிக்க முற்பட்ட போதும் அந்நபர் தப்பிச் சென்றுள்ளார். எனினும் மேற்படி சந்தேகிக்கும் நபரை தேடும் பணியில் பிரதேச வாசிகளும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவன் அக்கரப்பத்தனை பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசால்லக்கு மாற்றப் பட்டுள்ளான். (இ-7)

## லொறி விபத்தில் ஒருவர் பலி; ஐந்து பேர் வைத்தியசாலையில்





(புத்தளம்)

புத்தளம் - மொனராகல பிரதான வீதியின் மஹகொடயாய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சியபலாவ தேவாலயத்திற்கு யாத்திரை சென்ற மாலபே பகுதியை சேர்ந்த சிலர் பயணித்த சிறிய ரக லொறி ஒன்றும் தனியார் பேருந்து ஒன்றும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மாலபே பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் விபத்தில் காயமடைந்த ஐவரும் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகல வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவம் தொடர்பில் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## 126 அப்பாவித் தமிழர்களின் 33 ஆவது நினைவேந்தல்



(திருக்கோவில்)

திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தங்கவேலாயுதபுரம் உடும்பன்குளம் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட 126 அப்பாவித் தமிழர்களின் 33 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் உயிரிழந்தோருக்கு ஆத்மசாந்தி வேண்டி நடத்தப்பட்ட சமய வழிபாடுகளில், உறவினர்கள், குடும்பத்தவர்கள் கலந்து கொண்டனர் .

அம்பாறை மாவட்ட காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு நேற்று தங்கவேலாயுதபுரம் மலையடிப் பிள்ளையார் கோவிலில் இடம்பெற்றது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக தீபங்கள் ஏற்றப்பட்டு. மலைமேல் அமைந்துள்ள முருகன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன. உடும்பன் குளம் பகுதியில் அப்பாவித் தமிழர்கள் 1986 பெப்ரவரி 19 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-7)

## இலஞ்சம் பெற்ற அதிபருக்கு மறியல்

(கொழும்பு)

முதலாம்தரத்திற்கு மாணவர் ஒருவரை அனுமதிப்பதற்காக ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம்பெற்றதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள பெண் அதிபர் ஒருவரை எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான அதிபர்காலி, அஃமீமன பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பால்மா தரம் தொடர்பிலான குற்றச்சாட்டு ஆதாரமற்றது

## அமைச்சர் ராஜித மறுப்பு



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் தரம் தொடர்பில் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவையென்றும் இது வரை முன்னெடுக்கப்பட்ட எந்த வொரு சோதனையிலும் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் எவ்வித பொருட்களும் இல்லை யென நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரட்ன மற்றும் நிபுணர்கள் குழுவி னரும் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே இவர்கள் மேற்கண்ட வாறு கூறினர். நாட்டுக்குள் இறக் குமதி செய்யப்பட்டிருக்கும் பால் மா பற்றி பல்வேறு வகையான குற் றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டுள்ளன.

சிலர் இதனை அரசியல்மயப் படுத்தப் பார்க்கின்றனர். இது விஞ்ஞானபூர்வமானதேயன்றி அரசியல் ரீதியானதல்ல. இது போஷாக்குடன் தொடர்புபட்ட விடயம். அதனைவிடுத்து பால்மா நாட்டுக்கு தேவையா? இல் லையா? என்பதைப் பற்றிய விடயமல்ல என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்தார். பால்மா கம்பனிகள் மீதான அக்கறையால் பால்மாவை, அமெரிக்கா சிபாரிசு செய்தபோதும் பிறந்த சிசுக்களுக்கு தாய்ப்பாலே சிறந்தது என்பதை அங்கீகரிப்பதற்காக அமெரிக்கா வுக்கு நான், பாரிய அழுத்தம் கொடுத்திருந்தேன்.

புகையிலைப் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக புகையிலை மீது 90 சதவீத வரியை விதித்துள் ளோம். சீனிப் பாவனையைக் குறைப்பதற்காக ஒவ்வொரு ஒரு கிலோ கிராம் சீனியிலும் 50 சதவீத வரியை அறவிடுகின்றோம். இனிப்பு பானங்களிலுள்ள சீனி யின் அளவை 10 சதவீதத்தால் குறைத்துள்ளோம்.

அத்துடன் பல மருந்துகளின் விலைகளைக் குறைத்துள்ளோம். நாம் எமது சேவையை மிகுந்த அர்ப்பணிப்புடனேயே முன் னெடுத்துள்ளோம். மேடைகளி லும் செய்தியாளர் மாநாட்டிலும் குற்றம் சுமத்துவது இலகுவான விடயம். ஆனால் அனைத்து விடயங்களையும் மிகவும் ஆழ மாக ஆராய்ந்தே முன்னெடுத்துள் ளதாகவும் அமைச்சர் தெரிவித் தார்.

நாம் மருந்து விலைகளை குறைக்கும்போது பல வெளிநாட்டு தூதுவர்கள் என்மீது தாக்குதல் நடத்த முனைந்தனர். எனினும் எமது இந்த முயற்சிக்கு சர்வதேச தரம் கொண்ட ஆவணங்களே உதவி புரிந்தன். ஆரம்பத்தில் அவர்கள் அதனை 05 மில்லியன் களுக்கு வழங்க முன்வந்தபோ தும் பின்னர் அதனை இலவசமாக வழங்கினர். நாம் இது தொடர் பான அனைத்து விடயங்களை யும் நாட்டு மக்களின் நன்மை கருதி மிகுந்த அவதானத்துடன் முன்னெடுத்திருந்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

"பால்மா இறக்குமதியை தொட ருவதா? அல்லது நிறுத்துவதா? என்பது தொடர்பில் அரசாங்கமே தீர்மானம் மேற்கொள்ள வேண் டும். தற்போதுள்ள தேவையின் 10 சதவீதப் பால் உற்பத்தியே எம் மிடம் உள்ளது. இந்நிலையில் பால்மா இறக்குமதியை நிறுத் தினால் எமது பிள்ளைகளின் போஷணை தரத்துக்கு என்ன நடைபெறும்? சிலர் பால் தேவை யில்லையென நினைக்கிறார்கள். பணம் படைத்தவர்கள் பாலுக்கு பதிலாக சீஸ் மற்றும் பட்டரை பயன்படுத்தலாம். ஆனால் ஏழை மக்களுக்கு இலகுவாகவும் இலாப மாகவும் கிடைக்கக்கூடிய ஒரே புரத உணவுப் பொருளென்றால் அது பாலாகத்தான் இருக்க முடி யும். இவற்றை கருத்திற் கொண்ட பின்னர் பால்மா இறக்குமதியை நிறுத்த யார் வேண்டுமென்றாலும் களத்தில் இறங்குங்கள்," என்றும் அமைச்ர் தெரிவித்தார்.

சுகாதார சேவைகளின் (பிர தான உணவு அதிகாரசபை) பணிப் பாளர் நாயகம் டாக்டர். அனில் ஜாசிங்க கருத்து தெரிவிக்கும் போது, இறக்குமதி செய்யப்படும் பால்மா சரியான போஷணை தரத்தில் இருக்கிறதா? என்பதை தீர்மானிப்பதே முக்கியமான கட மையாகும். இது அரசியல் சம்பந் தப்பட்ட விடயமல்ல. பால்மாவுக்கு பதிலாக தூய பசும்பாலை மக்கள் அருந்துவதனை பார்ப்பதற்கே அமைச்சு விரும்புகின்றது. எனி னும் பசும்பால் உற்பத்தி போது மான அளவு இல்லாததால், அந்த இடைவெளியை நிரப்புவதற்கா கவே பால்மா இறக்குமதி செய்யப் படுகின்றது எனத் தெரிவித்தார்.

உலக நாடுகளிலேயே பிறந்த சிசுவுக்கு தாய்ப்பால் வழங்குவது இலங்கையில் 80 சதவீதமாகு மென்றும் அவர் சுட்டிக்காட்டி னார். இது இலங்கை அரசாங்கத் தின் முயற்சியாலன்றி சாதாரண மாக இடம்பெற்ற விடயமல்ல் என்றும் இறக்குமதி செய்யப்படும் பால்மாவில் எவ்வித கலப்படமும் இல்லையென்பது நிரூபிக்கப்பட் டுள்ளதென்றும் அவர் தெரிவித் தார். (இ-7)

# புகையிரதக் கடவைகளில் பாதுகாப்புத் தடுப்புத்துலா அமைக்கப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள முக்கிய மான புகையிரதக் கடவைகளில் பாதுகாப்புத் தடுப்புத் துலா அமை க்கப்பட வேண்டும் என சாவகச் சேரி நகரசபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற அமர் வின் போதே இது தொடர்பாக உரிய தரப்பினருடன் பேசி தீர்வு காண முன்வர வேண்டும் என நகரசபைத் தவிசாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.மேலும் இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

சாவகச்சேரியில் மீசாலை, சங்கத்தானை மற்றும் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள புகையிரதக் கட வைகளில் தடுப்புத் துலா அமைக் கப்பட வேண்டும். குறித்த மூன்று புகையிரதக் கடவைகளும் பொது மக்களால் அதிகளவில் பயன்படுத் தப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலைக்கு முன்பாக வுள்ள கடவையை நோயாளர்க ளும்,சங்கத்தானை கடவையை பாடசாலை மாணவர்களும், மீசாலை கடவையை தனியார் கல்வி நிலைய மாணவர்களும் அதிகளவில் பயன்படுத்துகின் றனர்.

ஆகவே குறித்த மூன்று இடங் களிலும் தடுப்புத் துலா அமைக்க ப்பட வேண்டியது அவசியம். அத் துடன் சில வேளைகளில் கட வைகளில் உள்ள சமிக்ஞை விளக் குகள் மற்றும் அபாய ஒலிகள் தொடர்ந்து பாவனையில் உள் ளன.

இதனால் புகையிரதம் வரும் வேளைகளிலும் பொதுமக்கள் கவனக்குறைவாக கடவையைக் கடக்க வாய்ப்புண்டு. அத்துடன் அபாய ஒலியின் சத்தம் போதாமல் காணப்படுகிறது. இவை தொடர் பாக உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து உயிர்ச் சேதங்களைத் தடுக்க முன்வர வேண்டும்என நகரசபை உறுப்பினர் கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன் பாகவுள்ள புகையிரதக் கடவை யில் இளைஞன் ஒருவர் மோதி இறந்தமைக்கு தடுப்பு துலா இல் லாமை தான் காரணம் என அவர் கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(இ-30)

# துறைமுகங்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும்



(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப்பற் றுறை பிரதியமைச்சர் அப்துல்லா மஹரூப் துறை முகங்கள் கப்பற் றுறை அமைச்சின் செயலாளர் கலாநிதி பராக்ரம திசாநாயக் கவை சந்தித்துள்ளார்.

குறித்த சந்திப்பு நேற்றுப் புதன் கிழமை கொழும்பிலுள்ள துறை முகங்கள் மற்றும் கப்பற்றுறை பிரதிய மைச்சின் அலுவலகத்தில் இடம் பெற்றது.

ஒலுவில் துறைமுகத்தில் காணப்படும் மீனவர்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அவர் களுக்கான தீர்வுகளை விரைவு படுத்து மாறும் திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்கான சகல நடவடிக்கைகள் தொடர்பாக மீளாய்வு செய்வதற்காக இவ் வார த்திற்குள் விஜயம் ஒன்றை மேற் கொள் ளுமாறும் பிரதியமைச்சர் மஹரூப் செயலாளருக்கு பணிப் புரை வழங்கினார்.

துறை முகங்களில் நில வும் வெற்றிடங்களை நிரப்புவ தற்கான விடயங்கள் தொடர்பி லும் செயலாளருடன் பிரதிய மைச்சர் கலந்தாலோசனை செய் தார். (இ-7)

# இலங்கையில் இப்படியொரு நோய்



Namal Rajapaksa
@RajapaksaNamal

Glad to have sat down with Jagath & Anoma & heard their story. Anoma's suffered for the last 17yrs with a muscle tissue deteriorating disease. They're hopeful that the Ayurvedic doctor from Malsiripura who stepped in to help them will hold the solution they've been searching for.

♡ 233 12:38 AM - Feb 18, 2019

(கொழும்பு)

இலங்கையில் தனது காதல் மனைவிக்காக கணவன் ஒரு வரின் செயற்பாடு பலரையும் நெகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

கடந்த 17 வருடங்களுக்கு முன்னர் ஜகத் - அனோமா காதல் தம்பதியினர் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

எனினும் சில மாதங்களில் அனோமா தசைத்திசு நோயினால் பாதிக்கப்பட்டார். இந்த நோயின் தாக்கம் காரணமாக அனோமாவின் உடலிலுள்ள சதைகள் கரைந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

நோயில் பாதிக்கப்பட்டுள்ள தனது காதல் மனைவியை காப் பாற்றுவதற்கு எடுக்கக்கூடிய அனை த்து முயற்சிகளையும் கணவர் ஜகத் மேற்கொண்டுள்ளார்.

மனைவிக்காக அவர் படும் கஷ்டம் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் அதிகளவாக பேசப் பட்டது.

இந்நிலையில் காதலர் தின மான கடந்த 14 ஆம் திகதி, ஜகத் - அனோமா காதல் தம்பதியரை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேடிச் சென்றுள்ளார்.

நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அனோமாவுக்கு உதவும் நோக் கில் நாமல் அவர்களின் வீட்டுக்கு சென்று நலம் விசாரித்தார்.

இதன்போது காதல் தம்பதியு டன் எடுத்துக் கொண்ட புகைப் படத்தை நாமல் ராஜபக்ஷ தனது சமூக வலைத்தளங்களிலும் பகிர்ந்துள்ளார்.

கடந்த 17 வருடங்களாக பாதிக் கப்பட்ட தன் மனைவியை பொறுப் புடன் பார்த்துக் கொள்ளும் ஜகத் துக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுக்கள் குவித்து வருகின் றன. (இ-7)

# ரஞ்சனின் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணை செய்ய குழு நியமனம்

(கொழும்பு)

கொக்கெய்ன் பயன்படுத்துபவர் களுள் நாடாளுமன்ற உறுப்பி னர்களும் இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ரா்மநாயக்க முன்வைத்துள்ள குற்றச்சாட்டை விசாரணை செய்ய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற குழுக்கூட்டத்தின் போதே இக் குழு நியமிப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவின் கரு த்து தொடர்பில் ஆராய்ந்து அடுத்த செயற்குழுக் கூட்டத்தின் போது. அறிக்கை சமர்ப்பிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள் ளது.

அமைச்சர் லக்ஸ்மன் கிரியெ ல்ல தலைமையில் அமைக்கப் பட்டுள்ள இந்தக் குழுவில் இரா ஜாங்க அமைச்சர் எரான் விக் கிரமரத்ன, நாடாளுமன்ற உறுப் பினர் மாரசிங்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்று குழு உறுப்பினரான நிஸ்ஸங்க நாணயக்கார ஆகியோர் உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டு ள்ளனர். (இ-7)

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

கடந்த 1 1/2 ஆண்டுகளாக கடக இராசியில் சஞ்சரித்து வந்த இராகுவும் மகர இராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் பெப்ரவரி 13 ஆம் திகதியன்று பெயர்ச்சியாகிறார்கள். அதன்படி மிதுனத்தில் இராகுவும் தனுசில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் சுய ஜாதகத்தில் இராகு-கேதுக்களின் பலம் அறிந்து, யோக பலம் பெற்ற நாளில் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்து கொண்டால், வாய்ப்புகள் வாசல் கதவைத் தட்டும்.

அடுத்த 1 1/2 ஆண்டுகள் இராகு பகவான், புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும் பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலும் சஞ்சரிப்பார். அதே சமயம் கேது பகவான், உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரியன் சாரத்திலும் பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலுமாக சஞ்சரிக்கப் போகிறார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம், சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும் சுய ஜாதகத்தின் திசாபுத்திப் படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

**ஒளிமய வாழ்வு தரும் 9 ஆம் இடத்து இராகு!**

**முன்னேற்றம் தரும் 3 ஆம் இடத்து கேது!**

இதுவரை 10 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், இப்போது 9 ஆம் இடமான பிதுரார்ஜித ஸ்தானத்திற்கு வருகிறார். இதனால் பொன்னும், பொருளும் போற்றுகின்ற செல்வாக்கு உங்களுக்கு கிடைக்கப் போகிறது. புண்ணிய காரியங்களுக்குப் பொருளுதவி செய்யப்போகிறீர்கள். நீங்கள் எந்தத் தொழில் செய்பவராக இருந்தாலும், அதில் எதிர்பார்த்ததை விட கூடுதல் இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு வணிகம் செய்ய விரும்புபவர்களுக்கு எதிர்பாராத விதத்தில் நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வாகனம் வாங்கலாமா? தொழில் செய்ய கடனுதவி கிடைக்குமா? என்று குழப்பத்தில் இருந்தவர்களுக்கு நல்ல பதில் கிடைக்கப் போகிறது. வாழ்வில் ஏற்ற இறக்கமான நிலை வந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு.

4 ஆம் இடத்தில் இருந்த கேது, இப்போது மூன்றாம் இடத்திற்கு வருகிறார். இதனால் முன்னேற்றம் கூடுதலாக கிடைக்கும். மூன்றாம் இடம் வெற்றிகள் ஸ்தானம் என்பதால், எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆனாலும் கேதுவின் பலத்தால் குடும்பச்சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் ஒருசில சமயங்களில் ஏமாற்றமும் மற்றொரு சமயத்தில் இருமடங்கு இலாபமும் கிடைக்கும். பண விடயத்தில் கண்டிப்புடனும் விழிப்புணர்ச்சியுடனும் இருப்பது நல்லது. பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். உங்களை விட்டுவிலகி இருந்தவர்கள் சிலர், இப்போது வந்து இணைவார்கள். வீடு, வாகனம் வாங்கும் அமைப்பும் வீட்டை பழுது பார்க்கும் அமைப்பும் உருவாகும்.

இதற்கு இடையில் கேது இருக்கும் மூன்றாம் இடமான தனுசு இராசிக்கு, 13.3.2019 முதல் 17.5.2019 வரை குரு பகவான் அதிகார கதியில் வருகிறார். அங்கு கேதுவோடு இணைந்து பல நற்பலன்கள் கிடைக்கச் செய்வார். மேலும் அங்கிருந்து இராகுவைப் பார்ப்பதால் பொருளாதாரம் மேம்படும். வழக்குகள் சாதகமாகும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சிகளுக்கு ஆதரவு கிடைக்கும். நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிக்கும் பொற்காலம் இதுவாகும்.

**குரு சாரத்தில் இராகு சஞ்சாரம் (13.2.2019 முதல்19.8.2019 வரை)**

### ஒன்பதாமிடத்து இராகு பொன், பொருள் குவிய வைக்கும்

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல பலன்கள் இல்லம் தேடி வரும். முன்னோர் சொத்துக்களில் முறையான வருமானம் கிடைக்கும். பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். குல தெய்வப் பிரார்த்தனைகளை குடும்பத்துடன் சென்று நிறைவேற்றுவீர்கள். பயணங்கள் பலன் தருவதாக அமையும். தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். பங்காளிப் பகை மாறும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். ஆபரணங்கள் வாங்குவதில்ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு யோகம் கைகூடும்.

**சுய சாரத்தில் இராகு சஞ்சாரம் (20.8.2019 முதல்27.4.2020 வரை)**

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, இனிய பலன்கள் ஏராளமாக நடைபெறும். பணியில் இருந்த தொய்வு அகலும். இடமாற்றம், வீடுமாற்றம், உத்தியோக மாற்றம் உருவாகலாம். பெற்றோர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். பிறரை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களின் தூண்டுதலின் பேரில் குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படும். எனவே குடும்பத் தகவல்களை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பது நல்லது. வேலை வாய்ப்புக் கருதி வெளிநாடு செல்லத் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறலாம். இக்காலத்தில் நாகசாந்திப் பரிகாரங்களைச் செய்துகொள்ளுங்கள்.

**செவ்வாய்சாரத்தில்இராகுசஞ்சாரம் (28.4.2020 முதல்31.8.2020 வரை)**

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, சொத்துக்களால் இலாபம் உண்டு. மாற்றினத்தவர்கள் உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட முன்வருவர். அரசுப்பணியில் இருப்பவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து சேரும். பல வருடங்களாக வேலை செய்தும் ப[illegible] நிரந்தரமாகவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இனிப்பான செய்தி கிடைக்கும். வெளிநாட்டு யோகம் சிலருக்கு வாய்க்கும். திடீர் தனலாபம் வரும் நேரம் இது. திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் 13.2.2019 முதல் 16.4.2019 வரை**

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது வரவு திருப்திகரமாக இருக்கும். நூதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். வெளிநாட்டில் இருந்து திடீர் அழைப்புகள் வந்து திக்குமுக்காடச் செய்யும். பிரிந்த குடும்ப உறுப்பினர் வந்திணைவர். கருத்து வேறுபாடுகள் அகலும். பணியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்புக் கிடைக்கும். பழைய ஆபரணங்களை கொடுத்துவிட்டுப் புதிய ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் ஏற்படும்.

**சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம் (17.4.2019 முதல் 23.12.2019 வரை)**

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, சேமிப்பு அதிகரிக்கும். சிறுசிறு பிரச்சினைகளை நீங்களே சமாளித்து விடுவீர்கள். இழப்புகளை ஈடுசெய்யப் புதிய வழிபிறக்கும். கடந்த சில மாதங்களாக செய்த முயற்சியில் இருந்த தடை அகலும். அதற்கு அரசியல் ஈடுபாடு கொண்டவர்களின் ஆதரவு கிடைக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அணிந்து அழகு பார்ப்பீர்கள். பாகப் பிரிவினைகள் சுமுகமாகும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (24.12.2019 முதல்31.8.2020 வரை)**

இக்காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து கிடைக்கும். வியாபாரப் போட்டிகள் அகலும். எதிரிகள் விலகுவார்கள். எதிர்பார்த்த வேலைவாய்ப்பு கிடைத்து திடீர் முன்னேற்றம் காண்பீர்கள். வீடுகட்டும் யோகம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களை விற்றுப் புதிய சொத்துக்கள் வாங்கும் முயற்சி கைகூடும்.




முன்னோர் வழிபாட்டிலும், குல தெய்வ வழிபாட்டிலும் ஆர்வம் காட்டுவீர்கள். பரிசீலனையில் இருந்த பதவி உயர்வும் ஊதிய உயர்வும் வந்து சேரும். பணிபுரியும் இடத்தில் சலுகைகள் கிடைக்கும்.



**வழிபாடு!**

9 இல் சஞ்சரிக்கும் இராகுவால் ஒளிமயமான வாழ்க்கை அமையவும், மூன்றில் சஞ்சரிக்கும் கேதுவால் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கவும் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து திசைமாறிய அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.

**கவனம் தேவைப்படும் காலம்**


இராகு-கேது பெயர்ச்சியின் மூலமாக தனுசு இராசிக்கு வருகிறார் கேது பகவான். அவர் அங்கிருக்கும் சனியோடு இணைந்து சஞ்சாரம் செய்கிறார். அப்படி சஞ்சரிக்கும் வேளையில், 8.5.2019 முதல் 3.9.2019 வரையான கால கட்டத்தில் சனி வக்கிரம் அடைகிறது. இந்தக்காலத்தில் எந்த விடயம் செய்வதாக இருந்தாலும், ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு கோஷ்டிப் பூசல்களால் மனக்கலக்கம் ஏற்படலாம். ஒரு சிலருக்கு நண்பர்களை நம்பி ஏமாறும் சூழ்நிலை உருவாகும். குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே விருப்பங்கள் நிறைவேறும். உங்களுக்கு அனுகூல தெய்வங்களைத் தேர்ந்தெடுத்து வழிபட்டு வருவதன் மூலமே, பிணிகளில் இருந்தும், பிரச்சினைகளில் இருந்தும் விடுபட இயலும்.


**பெண்களுக்கான பலன்கள்**

துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்த இராகு- கேது பெயர்ச்சி சீரும், சிறப்பும் இருக்கப்போகிறது. செய்யும் செயல்களில் வெற்றி கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு பாராட்டுவார்கள். கற்ற கல்விக்கேற்ற வேலை உங்களுக்கு கிடைக்கும். கடை மற்றும் தொழில் உங்கள் பெயரில் தொடங்குவது பற்றிப் பரிசீலிப்பீர்கள். கணவன் - மனைவிக்குள் இருந்த வீண் குழப்பங்கள் அகலும். ஒற்றுமை பலப்படும். கோபத்தின் காரணமாக இழந்த வாய்ப்புகளை மீண்டும் பெறுவீர்கள். பிள்ளைகளின் கல்யாணக்கனவுகளை நனவாக்குவீர்கள். தாய்வழி ஆதரவு உண்டு. உடன்பிறப்புகளின் முன்னேற்றத்திற்கு உதவி செய்வீர்கள். உதிரி வருமானம் பெருகும். சொத்துக்களின் பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். குடும்ப முன்னேற்றம் கருதிப் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். குலதெய்வ வழிபாடு, பாம்புக் கிரகத்திற்குரிய பரிகாரங்கள் செய்வதன் மூலம் நன்மைகள் வந்து சேரும்.

(தொடரும்)

# பதவி உயர்வுக்கு எதிராக ஊழியர்கள் உண்ணாவிரதம்





(வவுனியா)

இலங்கைப் போக்குவரத்துச் சபையால் வவுனியா சாலை ஊழியர்களுக்கு கடந்த வாரம் வழங்கிய பதவி உயர்வுகள் அரசியல் ரீதியாக வழங்கப்பட்டதாக தெரிவித்து நேற்று வவுனியா சாலை ஊழியர்கள் சிலர் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அடையாள உண்ணாவிரதத்தில்கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது, கடந்த 16 ஆம் திகதி வவுனியா சாலை ஊழியர்கள் 28 பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டதாகவும் இப்பதவி உயர்வுகளில் 20-25 வருட சேவை மூப்புடையவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்படவில்லை எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இ.போ.ச. சட்டத்திட்டங்களின்படி 5 வருட நிரந்தர சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சேவையின் அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

ஆனால் கடந்த வாரம் வழங்கப்பட்ட பதவி உயர்வுகள் அரசியல்வாதிகளின் சிபார்சின் பேரிலேயே வழங்கப்பட்டதாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் வவுனியா சாலை முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, பதவி உயர்வுகள் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். (இ-10)

# முத்து மாரியம்மன் ஆலய இராஜகோபுரம் அமைப்பதற்கான கால்கோள் விழா




(குருமன்காடு)

பண்டாரிக்குளம் முத்து மாரியம்மன் ஆலய பஞ்சதள இராஜ கோபுரம் அமைப்பதற்கான கால்கோள் விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழா சிவஸ்ரீ.ச.சங்கரதாஸ் குருக்கள் தலைமையில் அவரது புதல்வர்களான சிவஸ்ரீ.ச.ஸ்ரீவிவேக் குருக்கள் (ரகு ஐயா), பண்டாரிக்குளம் முத்துமாரியம்மன் ஆலய குரு சிவஸ்ரீ ச.ஸ்ரீராகுல சர்மா மற்றும் சிவஸ்ரீ.ச.பாலமுரளி சர்மா ஆகியோரின் அருளாசியுடன் ஆலய சிற்பி வினோஸ்ரீயின் முன்னேற்பாட்டில் இடம்பெற்றது. (7-250)

# முள்ளிவாய்க்காலில் போரின் போது உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அன்னதானமும்





(பனிக்கன்குளம்)

கடந்த 2009 ஆம் ஆண்டு போரின் போது உயிரிழந்தவர்களுக்கான ஆத்மசாந்தி பிரார்த்தனையினை மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் உதவிக்குருக்களான மகேந்திரநாதகுருக்கள் மற்றும் சிவாஜிகுருக்கள், சேரன்குருக்கள் ஆகியோர் இணைந்து நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நினைவு இடத்தில் கொட்டகை அமைக்கப்பட்டு வருகைதந்த குருக்களால் யாகம் வளர்க்கப்பட்டு ஆத்மசாந்திப் பூசைகள் சிறப்புற மேற்கொள்ளப்பட்டு பிண்டங்கள் முள்ளிவாய்க்கால் கடலில் கரைத்து வழிபாடுகளை மேற்கொண்டு அன்னதானமும் வழங்கி வைத்தனர்.

இதன்போது மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களும் முள்ளிவாய்க்கால் பகுதியைச் சேர்ந்த மக்களும் வழிபாடுகளில் கலந்து கொண்டனர். (7-281)

# மாங்குளம் பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் நிறைவு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் உப நகரங்களில் ஒன்றான மாங்குளம் பகுதிக்கான பேருந்து நிலையம் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் உப நகரங்களான ஒட்டுசுட்டான், திருமுறிகண்டி, மாங்குளம் ஆகிய பகுதிகளில் பேருந்து நிலையங்கள் அமைக்கப்படாத நிலையில் குறித்த பகுதிகளுக்கு பல்வேறு தேவை கருதி வரும் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்தாண்டு மாங்குளம் பகுதிக்கான பேருந்து நிலையத்திற்கான காணி அடையாளப்படுத்தப்பட்டு பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கடந்தாண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் பணிகள் நிறைவுற்றுள்ள நிலையில் மிக விரைவில் திறந்து வைக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. (7-315)

# எழுத்தாளர் தீபச்செல்வனின் நடுகல் நாவல் அறிமுக நிகழ்வு

(கிளிநொச்சி)

கல்விக் கலாசார மையத்தின் ஏற்பாட்டில் எழுத்தாளர் தீபச் செல்வனின் நடுகல் நாவல் அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் 23 ஆம் திகதி சனிக்கிழமை கரைச்சிப் பிரதேச கேட்போர்கூட மண்டபத்தில் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராசா தலைமையில் இடம்பெறும்.

இதில் விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார்.

இந் நடுகல் நாவலுக்கான விமர்சன உரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எழுத்தாளர் செல்வ மனோகரன், எழுத்தாளர் வெற்றிச் செல்வி ஆகியோர் வழங்குவர். (7)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்



(கிளிநொச்சி)

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு கட்டணங்கள் செலுத்தாமல் ஆணைக்குழுவினால் பறிக்கப்படும் அபாயத்தில் இருந்த காணிகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் செந்தில் நகர் கிரா மக்களுக்கு மீட்டுக் கொடுத்துள்ளார்.

பச்சிலைப்பள்ளி அரசர்கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள செந்தில் நகர் கிராமத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்குச் சொந்தமான காணியில் 43 குடும்பத்தினர் வசித்து வந்துள்ளனர். இவர்கள் 1987 ஆம் ஆண்டில் இருந்து ஆணைக்குழுவிற்கு பணம் செலுத்தவில்லை. இதனால் அவர்களின் காணிகள் பறிக்கப்படும் நிலையில் இருந்தன. இவ்விடயத்தை உடனடியாக பாராளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் ஆகியோர் கொண்டுவந்ததை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு காணி ஆணைக்குழுவுக்கு செலுத்த வேண்டிய 2 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை தனது சொந்த நிதியில் இருந்து வழங்கினார்.

நேற்று முன்தினம் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கயன், பிரதேச சபையின் உறுப்பினர்களான த.றமேஸ், வே.கோகுல்ராஜ், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர் க.ஜெயக்குமார், கிராம அலுவலர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (7)

# முத்தையன்கட்டுப் பகுதியில் வீதிமறியல் போராட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டுப் பகுதியில் வலதுகரை பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் துவிசக்கர வண்டியில் வீதியில் சென்ற தாயார் ஒருவர் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டு படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச் சைப்பிரிவில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

முத்தையன்கட்டு 1 ஆம் கண்டத்தினை சேர்ந்த 41 வயதுடைய சுபாதீஸ்வரன் நந்தினிதேவி என்ற குடும்பப் பெண்ணே இவ்வாறு படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து ஒட்டுசுட்டான் பிரதேச வீதிப்போக்குவரத்து பொலிஸார் நடந்து கொண்ட விதம் குறித்தும் விபத்தை ஏற்படுத்தியவர்களுக்கு பக்கச்சார்பாக செயற்படுவதாகவும் இது வரை எவரையும் கைது செய்யவில்லை எனவும் கோரி கிராம மக்கள் வீதியை மறித்துப் போராட்டம் ஒன்று மேற்கொண்ட னர்

நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் முத்தையன்கட்டு வலதுகரை முதன்மை வீதியை மறித்து ரயர்களைப் போட்டு எரித்து வீதியில் எவரும் பயணிக்க முடியாதவாறு தங்களுக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டத்தில் கிராம மக்கள் ஈடுபட்ட வேளை சம்பவ இடத்திற்கு வந்த ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தரப்புடன் பேசியுள்ளதுடன் சம்பவம் குறித்து விசாரணைகளை தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளமைக்கு அமைவாக மக்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். (7-281)

# பாரதம்

## மீண்டும் பா.ஜ.கவை தேர்ந்தெடுத்தால் வளர்ச்சிப் பணிகள் தொடரும் -மோடி

(வாரணாசி)

பாராளுமன்ற தேர்தலில் மீண்டும் பாரதீய ஜனதாவை தேர்ந்தெடுத்தால் வளர்ச்சிப்பணிகள் தொடரும் என பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்தார்.

பாராளுமன்ற தேர்தல் வரவுள்ள நிலையில் பிரதமர் நரேந்திர மோடி, உத்தர பிரதேசத்தில் உள்ள தனது வாரணாசி தொகுதிக்கு ஒரே மாதத்தில் 2ஆவது முறையாக நேற்று முன்தினம் சென்றார்.

அங்கு அவர் 15, 16ஆம் நூற்றாண்டில் பிரபலமாக விளங்கிய பக்தி இயக்கத்தை சேர்ந்த குரு ரவிதாஸ் பிறப்பிட வளர்ச்சி திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். நாட்டிலேயே முதன் முதலாக டீசல் என்ஜினை மின்சார என்ஜினாக மாற்றி இயக்கப்படுகிற ரயிலை அவர் பச்சைக்கொடியசைத்து தொடங்கியும் வைத்தார்.

இதையொட்டி முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் முன்னிலையில் நடந்த இந்த விழாவிலும், தொடர்ந்து ஒரு பொதுக்கூட்டத்திலும் பிரதமர் நரேந்திர மோடி பேசினார். அப்போது அவர் தெரிவித்ததாவது,

நான் கடந்த 2016ஆம் ஆண்டு இதே நாளில் இங்கு வந்தேன். குருவின் ஆசிகளைப்பெற்றேன். நாம் அனைவரும் குரு ரவிதாஸ் காட்டிய பாதையை பின்பற்றினால், நமது சமூகத்தில் பெருமளவுக்கு ஊழல் இருக்காது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இது நடக்காமல் போய் விட்டது.



குரு ரவிதாஸ், சாதியின் அடிப்படையில் எந்த விதமான பாகுபாடும் இருக்கக் கூடாது என்று வலியுறுத்தினார். சாதிய பாகுபாடு இருக்கிறவரையில், மக்கள் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள முடியாது. சமூக நல்லிணக்கம் சாத்தியப்படாது. சமத்துவம் உறுதி செய்ய முடியாது.

ஊழல்வாதிகளை எங்கள் அரசு தண்டிக்கிறது. நேர்மையானவர்களுக்கு பரிசு அளிக்கிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் நீங்கள் பலம் வாய்ந்த எங்கள் அரசை தேர்ந்தெடுத்தீர்கள். அதன் காரணமாக இந்த நாடு முன்னேற்றத்தை கண்டது. நீங்களும் சமூக, பொருளாதார நிலையில் முன்னேறுவதற்கு பல திட்டங்களைப் பெற்று பலன் அடைந்தீர்கள்.

அதே போன்று வரக்கூடிய தேர்தலிலும் நீங்கள் செயற்பட வேண்டும். பாரதீய ஜனதாவை தேர்ந்தெடுத்தால், வளர்ச்சிப்பணிகள் தொடரும்.

காங்கிரஸ் ஆட்சியின் போது கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக கூறியது போன்று நடைபெறவில்லை. அது போலியானது என்பதை மக்கள் அம்பலப்படுத்த வேண்டும்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்துக்கு, வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில் நல்லதொரு உதாரணம். ஆனால் அதையும் சிலர் விமர்சிப்பது வேதனை அளிக்கிறது.

இப்படிப்பட்டவர்களுக்கு (எதிர்க்கட்சிகளுக்கு) மக்கள் நாடாளுமன்ற தேர்தலில் தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## சவுதி இளவரசரை விமான நிலையத்துக்கே சென்று வரவேற்று அழைத்து வந்த பிரதமர் மோடி



(சென்னை)

இந்தியா வந்த சவுதி இளவரசர் முகமது பின் சல்மானை, அரசு நடைமுறைகளை ஒதுக்கி வைத்து விட்டு, பிரதமர் மோடி விமான நிலையத்துக்கு சென்று வரவேற்று அழைத்து வந்தார்.

புல்வாமா தாக்குதல் தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக்கோரி இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது. ஆனால் பாகிஸ்தான் மறுத்து வருகிறது. இதனால் இந்தியா-பாகிஸ்தான்இடையே மோதல் சூழல் நிலவி வருகிறது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், மூன்று நாள் தாமதமாக சவுதி இளவரசர் பின் சல்மான் பாகிஸ்தான் சென்றார். சவுதி இளவரசர் சல்மானை பாகிஸ்தான் நாட்டில் வழக்கமாக பின்பற்றப்படும் அரசு நடைமுறைகளை புறந்தள்ளி விட்டு விமான நிலையத்தில் இருந்து தனது காரில் அழைத்து வந்தார் பிரதமர் இம்ரான் கான். காரை இம்ரான் தானே ஓட்டி வந்தார்.

இதைத்தொடர்ந்து, ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உதவித் தொகை மற்றும் வர்த்தக ஒப்பந்தங்களில் சவுதி அரேபியா கையெழுத்திட்டது.



இந்தநிலையில் சவுதி இளவரசர் பின் சல்மான் நேற்று இரவு இந்தியா வந்தார்.

டில்லி விமான நிலையத்துக்கே சென்று பிரதமர் மோடி சவுதி இளவரசரை வரவேற்றார்.

இந்தியாவிலும் அரசு நடைமுறைகளை ஒதுக்கி வைத்து பிரதமர் மோடி விமான நிலையம் சென்று சவுதி இளவரசரை வரவேற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (4)

## இம்ரான் கான் பேச்சு அர்த்தமற்றது இந்திய வெளியுறவுத்துறை பதிலடி

(சென்னை)

புல்வாமா தாக்குதலையடுத்து பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் பேசியது அர்த்தமற்ற பேச்சு என இந்திய வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

"இந்திய அரசு ஆவணங்களையும், உளவுத்துறை தகவல்களையும் வழங்கினால் நடவடிக்கை எடுக்க தயங்கமாட்டேன்" என நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இம்ரான் கான் பேசியிருந்தார்.

இதற்கு பதிலளித்துள்ள வெளியுறவுத்துறை, "மும்பை தாக்குதல், பதன் கோட் தாக்குதல் விவகாரங்களில் ஆவணங்கள் வழங்கியும் பாகிஸ்தான் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதேபோல்மும்பைத்தாக்குதல் விவகாரத்தில் ஆவணங்கள் வழங்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் இம்ரான் கான் பேசியது அர்த்தமற்ற நொண்டி சாக்கு பேச்சு என தெரிவித்துள்ளது.

இதேவேளை, புல்வாமா போன்ற தாக்குதலைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புல்வாமாவில் நடந்தது போன்று ஒரு தாக்குதல் வரும் காலங்களில் நடக்காத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதோடு, அடிமட்ட அளவில் அனைத்து தகவல்களையும் சேகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், இந்த தாக்குதலுக்கு எப்படி இந்திய அரசு பதிலடியைக் கொடுக்கவுள்ளது என்பதை தெரிவிக்க விரும்பவில்லை.

சரியான பதிலடியைக் கொடுக்க பாதுகாப்பு படைகளுக்கு முழு சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது என பிரதமர் மோடி ஏற்கனவே கூறிவிட்டார்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## புல்வாமா தீவிரவாத தாக்

(வோஷிங்டன்)

ஜம்மு- காஷ்மீர் மாநிலம், புல்வாமா மாவட்டத்தில், ஜெய்ஷ் இ முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலைப் படைத் தாக்குதலில் இந்திய துணைராணுவப் படையினர் 40 பேர் கொல்லப்பட்டது மிகவும் கோரமான சம்பவம், விரைவில் முறைப்படியான அறிக்கை வெளியிடுவோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார்.

வோஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் தெரிவித்ததாவது,

ஜம்மு- காஷ்மீரில் புல்வாமா மாவட்டத்தில் இந்திய வீரர்கள் 40 பேர் மீது தீவிரவாதி நடத்திய தற்கொலைப்படைத் தாக்குதல் மிகவும் கோரமான சம்பவம். அங்கு நிலவும் சூழலை நான் தொடர்ந்து அறிந்து வருகிறேன். அது தொடர்பாக ஏராளமான விபரங்களும் வந்துள்ளன. நாங்கள் சரியான நேரத்தில் இது குறித்து எங்களின் கருத்தை தெரிவிப்போம்.

அதேசமயம், இந்தியாவும், பாகிஸ்தானும் புல்வாமா தாக்குதல் சம்பவத்தில் இணைந்து விசாரணையை மேற்கொண்டால் சிறப்பானதாக இருக்கும். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க உள்துறை துணை செய்தித்தொடர்பாளர் தெரிவிக்கையில், புல்வாமா தாக்குதல் குறித்து இந்திய அரசோடு நெருங்கிய தொடர்பில் அமெரிக்கா இருந்து வருகிறது. இந்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மட்டும் கூறாமல், இந்தியாவுக்கு தேவையான ஆதரவையும் அளிப்போம்.

இந்த தாக்குதலுக்கு காரணமானவர்கள் ஒவ்வொருவரும் தண்டிக்கப்பட வேண்டும், அதற்கான விசாரணைக்கு தேவையான ஒத்துழைப்பை பாகிஸ்தான் வழங்க வலியுறுத்துவோம்" எனத் தெரிவித்தார்.



## மீண்டும் சிரியாவில் அ

(டமாஸ்கஸ்)

சிரியாவிலிருந்து படைகள் வெளியேறும் என்று கூறிய நிலையில் மீண்டும் அமெரிக்கப் படைகளை அமர்த்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும், ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும் சண்டை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதிகள் அரசு கூட்டுப் படைகளால் மீட்கப்பட்டு விட்டன.

இந்த உள்நாட்டுப் போரில் குர்து இனப் போராளிகளுக்கு ஆதரவாக அமெரிக்கா தங்கள் நாட்டு வீரர்களை அனுப்பி சண்டையிட்டது.



இந்த நிலையில் டிசெம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்றுவிட்டோம்.

ஐ.எஸ். தீவிரவாதிகளைத் தோற்க

## வீட்டில் திடீரென ஒரே குடும்பத்தைச் சே

### கனடாவில் துயரம்




(ரொறண்டோ)

கனடாவில் மாண்ட்ரியல் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 7 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

கனடாவில் மாண்ட்ரியல் பகுதியில் நள்ளிரவில் ஒரு வீட்டில் திடீரென



# தாக்குதல் கோரமானது




ஜனாதிபதி ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜான் போல்டன் தெரிவிக்கையில், இந்தியா தன்னுடைய சுயபாதுகாப்புக்காக நடவடிக்கை எடுக்க உரிமை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

மேலும், உள்துறை அமைச்சர் மைக் பொம்பியோ, போல்டன், வெள்ளை மாளிகை செயலாளர் சாரா சாண்டர்ஸ் ஆகியோர் தனியாக விடுத்த அறிக்கையில், ஜெய்ஷ் இமுகமது தீவிரவாத அமைப்பு, அதன் தலைவர் மீது பாகிஸ்தான் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிரவாதத்துக்கு ஆதரவு அளிப்பதை நிறுத்த வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர். (4)

# சிரியாவில் இரட்டைக் குண்டுவெடிப்பு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவிப்பு



(நியூயோர்க்)

சிரியாவில் இரட்டைக் குண்டுவெடிப்பு நிகழ்த்தி பொதுமக்களை கொன்று குவித்த கொடூரச் செயலுக்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்து வரும் உள்நாட்டுப் போரில் பொதுமக்கள் பலியாவது தொடர்கிறது.

கடந்த திங்கட்கிழமையன்று இட்லிப் நகரின் அருகே உள்ள அல்குசார் பகுதியில் நடந்த இரட்டைக் குண்டுவெடிப்பில் பொதுமக்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட 17 பேர் உயிரிழந்தனர்.

சுமார் 100 பேர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளரின் செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்ததாவது.

சிரியாவின் வடமேற்குப் பகுதியில் நடந்து வரும் உள்நாட்டு சண்டை மற்றும் அதிகரித்து வரும் உயிர்ப் பலி தொடர்பாக வரும் தகவல்களால் ஐ.நா. கடும்கவலை அடைந்துள்ளது.

போர் காரணமாக இட்லிப் மாகாணத்தில் மட்டும் 130 பாடசாலைகள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளன. இதனால் சுமார் 50 ஆயிரம் குழந்தைகளின் கல்வி தடைப்பட்டுள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் பொதுமக்களின் அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை தடுத்து, பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டும் என அனைத்து தரப்பையும் ஐ.நா. சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என தெரிவித்துள்ளார். (4)

# அமெரிக்கப் படைகள்



டிக்க அனுப்பப்பட்ட அமெரிக்கப் படை வெற்றி பெற்றுவிட்டது. ஆதலால், சிரியாவில் இருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறும் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதற்கு பிரிட்டன் உள்ளிட்ட உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில் மீண்டும் கணிசமான அளவில் அமெரிக்கப் படைகள் சிரியாவில் இருக்கும் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இதுகுறித்த பேச்சுவார்த்தையில் சிரியாவில் இயங்கும் குர்து படை தளபதி, மஸ்லம் கோம்பானி அமெரிக்க அதிகாரிகளுடன் ஈடுபட்டதாகவும், அமெரிக்கப் படைகள் சிரியாவிலிருந்து ஐ.எஸ்ஸ்'க்கு எதிராகப் போராடச் சம்மதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து 1000-15000 வரை இராணுவ வீரர்கள் சிரியாவிலிருந்து குர்து படைக்கு ஆதரவாக ஐ.எஸ்ஸ்'க்கு எதிராகச் சண்டையிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# வெனிசுவெலா மக்களுக்கு அமெரிக்கா துணை நிற்கும்

## ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா தொடர்ந்தும் வெனிசுவெலா மக்களுக்கு துணை நிற்கும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் பதிவிட்டுள்ள டுவிட்டில், 'வெனிசுவெலா மக்கள் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்காகப் போராடுகிறார்கள். அவர்களுக்கு அமெரிக்கா துணை நிற்கும்.

நான் வெனிசுவெலா ஜனாதிபதி மதுரோவின் ஆட்சியிலுள்ள ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கிறேன். வறுமை, மரணம், பசி அனைத்துக்கும் முடிவு கட்டுங்கள்.

உங்கள் மக்களைச் செல்ல விடுங்கள். வெனிசுவெலா மக்கள் ஒன்றுசேர வேண்டிய நேரமிது" என தெரிவித்துள்ளார்.

தென் அமெரிக்காவில் எண்ணெய் வளம் மிக்க நாடுகளில் வெனிசுவெலாவும் ஒன்று. கடந்த மே மாதம் நடைபெற்ற தேர்தலில் நிக்கோலஸ் மதுரோ வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஜனாதிபதியானார்.

தேர்தலில் பல்வேறு முறைகேடுகள் செய்து மதுரோ வென்றிருப்பதாக சர்வதேச அளவில் விமர்சனங்கள் எழுந்தன.

கடும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்றவற்றாலும், அரசியல் நிலையற்ற தன்மையாலும் வெனிசுவெலா திண்டாடி வருகிறது.

இந்தநிலையில் கடந்த மாதம் எதிர்க்கட்சித் தலைவர் கைடோ அமெரிக்கா ஆதரவுடன் தன்னை இடைக்கால ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டு சர்வதேச நாடுகளின் உதவியுடன் வெனிசுவெலா மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி வழங்க வேண்டும் எனக் கோரி வருகின்றார்.

இதன்காரணமாக வெனிசுவெலாவில் அரசியல் குழப்பம் நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# ...ரன தீ விபத்து

## ...ச் சேர்ந்த 7 பேர் பலி



தீப்பிடித்தது. அப்போது அங்கு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தவர்கள் அலறினர்.

உடனே அக்கம் பக்கத்தினர் ஓடிச் சென்று பார்த்தனர். தீயணைப்பு படையினரும் விரைந்து வந்தனர். இந்த விபத்தில் அந்த வீட்டில் தங்கியிருந்த 7 குழந்தைகள் தீயில் கருகி பலியாகினர். ஒரு ஆணும் பெண்ணும் பலத்த காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தீ விபத்தில் உயிரிழந்த 7 குழந்தைகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள். அனைவரும் சிரியா அகதிகள் ஆவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7)

# பாகிஸ்தான்-இந்தியா இடையே மத்தியஸ்தம் வகிக்கத் தயார்

## ஐ.நா. தெரிவிப்பு

(ஜெனிவா)

பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் அதிகரித்துவரும் பதற்றங்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இருதரப்பும் கோரும் பட்சத்தில் இரு நாடுகளுக்கும் இடையே மத்தியஸ்தம் வகிக்க ஐ.நா. செயலாளர் நாயகம் தயாராக விருப்பதாக ஐ.நா. பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் (Stephane Dujarric) தெரிவித்தார்.

இந்திய- பாகிஸ்தான் விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர்,

"இவ்விவகாரத்தில் தலையிடுமாறு பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சு, ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

அதன்படி, இருதரப்பும் கோரும் பட்சத்தில் இவ்விவகாரத்தில் தலையிட ஐ.நா. அதிகாரிகள் தயாராகவிருப்பதாக செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நிலையை கட்டுப்படுத்தி பதற்றத்தை தணிப்பதற்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் இரு தரப்பையும் செயலாளர் நாயகம் வலியுறுத்தியுள்ளார்" எனத் தெரிவித்தார்.

ஜம்மு-காஷ்மீர் தாக்குதலுக்கு பாகிஸ்தான் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்தியா பதில் தாக்குதல் நடத்தினால், பாகிஸ்தானும் பதிலடி கொடுக்கும் என பிரதமர் இம்ரான் கான் நேற்று முன்தினம் எச்சரித்துள்ளார்.

இந்திய நிர்வாக கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை இராணுவ வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 40க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு இயங்கும் ஜெய்ஷ்-இ-முகம்மது அமைப்பு புல்வாமா தாக்குதலுக்கு பொறுப்பேற்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# கொழும்பிலிருந்து சென்னைக்கு

## ஒரே பயணச்சீட்டில் புகையிரதப் பயணம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் புகையிரத சேவையை மீண்டும் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சேவையின் மூலம் சென்னைக்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் ஒரே பயணச் சீட்டின் மூலம் புகையிரதப் பயணத்தை மேற்கொள்ள முடியும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான புகையிரதப் சேவையை ஆரம்பிக்க முடியும் என்றும், இதன் மூலம் இலங்கை பௌத்த யாத்திரிகர்கள் குறைந்த கட்டணங்களில் பயணங்களை மேற்கொள்ள முடியும் என்றும் போக்குவரத்து அமைச்சு, நம்புவதாக பிரதமர் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதேவேளை, தென்னிந்தியாவுக்கும் காங்கேசன்துறை மற்றும் தலைமன்னாருக்கும் இடையில், கடல்வழிப் போக்குவரத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் காங்கேசன்துறை இறங்குதுறை புனரமைப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை இறங்குதுறை 167 மீற்றர் நீளத்தையும் 22 மீற்றர் அகலத்தையும் கொண்டதாக விரிவுபடுத்தப்படவுள்ளது. அலைத் தடுப்பு அணையும் புதிதாக அமைக்கப்படவுள்ளது.

இதற்காக இந்தியா 45.27 மில்லியன் டொலரை கடனாக வழங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலதிகமாக, பழைய சீமெந்து தொழிற்சாலை இருந்த இடத்தில், புதிதாக கைத்தொழில் வலயம் ஒன்று அமைக்கப்படவுள்ளதுடன், தலைமன்னார் இறங்குதுறை அருகே, விடுதிகள், உணவகங்கள், களஞ்சியசாலைகளும் அமைக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாட்டிற்கு பிரபலமான ஆட்சியை விட விஞ்ஞானபூர்வ ஆட்சியே தேவை



## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(களுத்துறை)

பிரபலமான ஆட்சியை விட விஞ்ஞான பூர்வமான ஆட்சியே நாட்டுக்கு அவசியமானது எனப் பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற "ஜனபியச" திட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர்,

பிரபலமான ஆட்சிக்குப் பதிலாக விஞ்ஞானபூர்வமான ஆட்சியைக் கொண்டு வந்தால், நாட்டை விரைவாக மறுபக்கம் திருப்ப முடியும். எமது நாடு இந்த நிலைக்கு தள்ளப்படுவதற்கு கீழ்த்தரமான ஜனநாயகவாதமே காரணம். நாம் சிறுவயதில் பல பிரபலமான வாக்குறுதிகளை கேள்வியுற்றோம்.

தற்பொழுது காலணி சோடியொன்று தருவதாகக் கூறுகின்றனர்.

சீருடைத் துணி, பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. தொலைக்காட்சி, தொலைபேசி என்பவற்றை இலவசமாகத் தரப்போவதாகவும் எதிர்காலத்தில் சிலர் கூறலாம். அரசாங்கம் இவ்வாறு பயணிக்க முடியாது. எமது முதலீட்டுச் செலவை முன்னுரிமை அடிப்படையில் அடையாளம் காண வேண்டும்.

சுகாதாரத் துறையில் மருத்துவர்களை உருவாக்குவதா, தாதிகளை உருவாக்குவதா, சுகாதார ஊழியர்களை உருவாக்குவதா, கல்வித் துறையில் என்ன செய்வது? சகல துறைகளிலும் விஞ்ஞானபூர்வமாக எதற்கு முன்னுரிமை யளிப்பதென அடையாளம் கண்டு சரியாக முதலிட வேண்டும்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு மேலதிகமாக இன்னுமொரு விமான நிலையம் அமைக்க வேண்டுமென, 2006 இல் மகிந்த ராஜபக்ஷ நியமித்த குழு பரிந்துரை செய்திருந்தது. இது தொடர்பில் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டன. இறுதியில் மத்தளவில் இரண்டாவது விமான நிலையம் அமைக்கப்பட்டது. மகிந்தவின் மாவட்டத்தில்தான் அனைத்தும் உருவாக்கப்பட்டன. கட்டுநாயக்கவில் மற்றொரு ஓடு பாதையை உருவாக்கியிருந்தால் மேலும் பல விமானங்கள் இங்கு வந்திருக்கும். ஆனால் மத்தளவில் விமான நிலையமல்லாது மீன்கடையே உருவாக்கப்பட்டது.

மத்தள விமான நிலையம் 2018 இல் 14 மில்லியன் ரூபாய் வருமானமீட்டியது. ஆனால் இவ்விமான நிலையத்தை நிர்மாணிக்க 5,600 மில்லியன்கள் செலவிடப்பட்டன. சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருவதானால், சிறந்த விமான நிலையம் அவசியமாகும்.

பிரபலமான ஆட்சிக்கும் விஞ்ஞானபூர்வமான ஆட்சிக்கும் இடையிலான வித்தியாசம் இதுவே என்றும் அவர் மேலும் விளக்கமளித்தார். (இ-7)

# உருக்குலைந்த நிலையில் இளைஞனின் சடலம்



(லிந்துலை)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் உருக்குலைந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மெராயா, ஊவாக்கலை தோட்டம் 3 ஆம் பிரிவில் வனப்பகுதியிலிருந்து பொது மக்கள் வழங்கிய தகவலுக்கமைய இந்தச் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் அடையாளம் காண முடியாத நிலையில் உருக்குலைந்து காணப்படுவதாகவும் சுமார் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் நுவரெலியா மாவட்ட நீதவானின் மரண விசாரணைகளின் பின்னர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

குறித்த இளைஞனை எவராவது கொலை செய்து காட்டுப்பகுதிக்குள் வீசியுள்ளார்களா? என்ற கோணத்தில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை. ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உத்தமர் குணம்

ஒரு வேடன் காட்டுக்கு வேட்டையாடுவதற்காகப் போனான். இவன்தானே மிருகங்களைத் துரத்திக்கொண்டு போக வேண்டும்?

ஆனால் பாருங்கள் அதற்குப் பதிலாக ஒரு புலி இவனைத் துரத்த ஆரம்பித்து விட்டது!

" வேட்டையாடினவரைக்கும் போதும்! " இனிமேல் ஆள் பிழைத்தால் போதும் என்று சிட்டாகப் பறந்து வந்தான். புலியும் விடாமல் துரத்திக் கொண்டே வந்தது. "எப்படியும் இன்றைக்கு இவனை ஒரு வழி செய்துவிடவேண்டும்"

இவன் பார்த்தான் பக்கத்திலே ஒரு மரம். மிகவும் உயரமாக வளர்ந்திருந்தது. கிடுகிடு என்று அதிலே ஏறி உயரப் போய் ஒரு கிளையிலே உட்கார்ந்து கொண்டான். அப்பாடா என்று பெரு மூச்சுவிட்டுக் கொண்டு அண்ணார்ந்து பார்த்தான். பார்த்தால் அவன் தலைக்கு மேலே இன்னொரு கிளையிலே ஒரு கரடிக்குட்டி உட்கார்ந்திருக்கு!

துரத்திக் கொண்டு வந்த புலி அந்த மரத்திற்கு அடியிலே சுத்தி சுத்தி வந்தது. மரத்தின் மேலே அதனால் ஏறமுடியவில்லை!

என்ன செய்வது என்று யோசித்து! அந்த வேடனை வேட்டையாடுவதற்கு என்ன வழி! கொஞ்சம் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டால் அது சாத்தியமா என்று முடிவு செய்தது!

உச்சிக் கிளையிலே உட்கார்ந்திருக்கின்றது அல்லவா... ஒரு கரடி. அதைப்பார்த்து சொல்லியது கரடியாரே! உனக்குக் கீழே ஒரு கிளையிலே உட்கார்ந்திருக்கிறானே அந்த வேடன்! அவன் மிருகங்களை வேட்டையாடுகிறவன். அதனால் அவன் எங்கள் இரண்டு பேருக்குமே விரோதி! அதனால் நீ எனக்கு ஒரு உதவி பண்ண வேண்டும்! என்றது!

" என்ன செய்ய வேண்டும்? " என்று கேட்டது கரடி!

"வேறு ஒன்றுமில்லை! அந்த ஆளைப் பிடித்து கீழே தள்ளிவிட்டுவிடு!" நான் பிடித்துக் கொண்டு போய்விடுகின்றேன்! என்றது.

கரடி இதுக்கு சம்மதிக்கவில்லை! அது என்ன சொன்னது தெரியுமா?

" எப்ப இந்த வேடன், நான் இருக்கிற இந்த மரத்திலே வந்து ஏறிக்கொண்டானோ அப்பவே அவன் எனக்கு அடைக்கலம் ஆகிவிட்டான்" என்று அர்த்தம். அடைக்கலமாக வந்து சேர்ந்துவிட்ட ஒருவனை கீழே தள்ளிவிடுவது சரி இல்லை! அதனாலே நான் அவனை பிடித்து கீழே தள்ள மாட்டேன்! என்று சொல்லிவிட்டது.

அப்படி சொல்லிவிட்டு அந்தக் கரடி தூங்கப் போய்விட்டது! கொஞ்ச நேரம் ஆகிவிட்டது.

இப்பொழுது அந்தக் கரடி நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த வேடன் மட்டும் முழித்துக் கொண்டு இருக்கின்றான். அவனுக்கு எப்படித் தூக்கம் வரும்! புலி மரத்தடியில் நின்று கொண்டிருக்கின்றது.

இப்பொழுது அந்தப் புலி வேடனை பார்த்து சொன்னது...

" இதோ பார் வேடனே! நீ இப்பொழுது தூங்கிக் கொண்டிருக்கின்ற அந்தக்கரடியை பிடித்துக் கீழே தள்ளு! " நான் உன்னை ஒன்றும் செய்யாமல் போய்விடுகின்றேன்! என்றது!

அந்த வேடன் யோசித்துப் பார்த்தான். எப்படியோ நாம் பிழைத்தால் போதும் என்கிற மனித குணம் அவனுக்கு வந்துவிட்டது! அதனால் நன்றியில்லாத ஒரு காரியத்தை செய்யப் போனான். ஆமாம்! அந்தக் கரடியை கீழே தள்ளிவிடுவதற்காகப் போனான்.

தூங்கிக் கொண்டிருந்த கரடி அந்தச் சமயம் பார்த்து திடீர் என்று முழித்துக் கொண்டது! சடார் என்று இன்னொரு கிளைக்குப் போய்விட்டது!

இப்ப புலி மறுபடியும் பேச ஆரம்பித்தது.

"இதோ பார் கரடியாரே! இந்த வேடன்தான் கொஞ்சம்கூட நன்றி இல்லாமல் உன்னை கீழே தள்ளிவிடப் பார்த்தான்" அப்படிப்பட்ட ஒருத்தனை நீ கீழே தள்ளிவிட்டால் என்ன? அவனுக்காக ஏன் வீணாக இரக்கம் காட்டிக் கொண்டிருக்கின்றாய் என்றது.

இப்பவும் அந்தக் கரடி தன்னுடைய கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை! என்ன சொன்னது தெரியுமா?

" இதோ பார் புலியே இப்பவும் நான் அந்த வேடனை கீழே தள்ளிவிடமாட்டேன்!" ஏனென்றால் உத்தமர்கள் மற்றவர்கள் இழைக்கிற தீமைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். அவர்கள் கெடுதல் செய்கின்றார்களே என்பதற்காக இவர்கள் திரும்ப அவர்களுக்குக் கெடுதல் செய்ய மாட்டார்கள்! அதனாலே நான் அந்த வேடனை கீழே தள்ளமாட்டேன்! என்று உறுதியாக சொல்லிவிட்டதாம் அந்தக் கரடி!

சீதையை துன்புறுத்திய அரக்கிகளைக் கொல்வதற்கு அனுமன் அனுமதி கேட்டபொழுது... சீதை அனுமனுக்கு கூறிய கதையாம் இது. இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், அடைக்கலம் என்று ஒருத்தர் வந்துவிட்டால் அவர்களை எந்த வகையிலும் காட்டிக் கொடுப்பது நியாயமில்லை.

ஒரு பெரியவர் வந்தார். ஒரு நாள் திடீர் என்று ஒரு ஆள் அவரிடம் ஓடி வந்தான். ஐயா...என்னைக் காப்பாற்றுங்கள்... எல்லோரும் துரத்திக் கொண்டு வருகிறார்கள்... அடைக்கலம் கொடுங்கள். இராத்திரி மட்டும் இங்கே இருந்துவிட்டு விடிந்ததும் போய்விடுகின்றேன் என்றான்!

சரி என்று சொல்லி அவன் தங்குவதற்கு இடம் கொடுத்தார் அந்தப் பெரியவர். காலையிலே எழுந்து பார்த்தார். அந்த ஆளையும் காணோம்; இந்தப் பெரியவர் கட்டி வைத்திருந்த குதிரையையும் காணோம். அதையும் கொண்டு போய்விட்டான் அந்த ஆள்!

இந்த விடயம் தெரிந்ததும் அந்தப் பெரியவர் அழ ஆரம்பித்துவிட்டார்.

"குதிரைதானே...போனால் போகட்டும் கவலைப்படாதீர்கள்" என்று எல்லோரும் ஆறுதல் சொன்னார்கள்.

" போனதைப் பற்றி நான் கவலைப்படவில்லை... " நான் கவலைப்படுவது எதுக்கு என்றால்... அவன் திருடிக் கொண்டு போனது குதிரை இல்லை... கழுதை, இருட்டிலே அடையாளம் தெரியாமல் இதை ஓட்டிக் கொண்டு போய்விட்டான். இதற்கு குணம் வேறு சரியில்லை. திடீர் என்று ஆளை கீழே தள்ளிவிட்டு உதைக்க ஆரம்பித்து விடும்... கடித்துவிடும். இந்நேரம் அந்த ஆள் என்ன பாடுபட்டுக் கொண்டிருக்கிறானோ? அதற்காகப் பரிதாபப்பட்டு அழுகின்றேன்" என்றார்! இவரும் ஒரு உத்தமர்.

## நிச்சயம் அம்பலத்திற்கு வரும் அமைச்சர்களின் தகவல்

# எந்தவொரு கருத்தையும் ஒருபோதும் நான் வாபஸ் பெறப் போவதில்லை

## கொக்கெய்ன் விவகாரத்தில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் உறுதி



(கொழும்பு)

கொக்கெய்ன் பயன்படுத்திய அமைச்சர்கள் தொடர்பில் தன்னிடம் போதிய சான்றுகள் இருப்பதாகவும், தான் கூறிய எந்தவொரு கருத்தையும் ஒருபோதும் வாபஸ் பெறப் போவதில்லையெனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

தான் இந்த அமைச்சரவையை மட்டும் சுட்டிக் காட்டவில்லையெனவும், இதற்கு முன்னர் இருந்த அமைச்சரவைகளிலும் இருந்த முன்னாள் அமைச்சர்களையும் இணைத்தே கூறியதாகவும் ரஞ்சன் தெரிவித்தார்.

என்னுடைய கட்சிக்காரர்கள் என்று வரையறுத்து நான் இந்தக் குற்றச்சாட்டை முன்வைக்கவில்லை. கொக்கெய்னுடனும், பாதாள உலகக் குழுக்களுடனும் தொடர்புள்ள பொதுவான அரசியல்வாதிகளைப் பற்றியே குறிப்பிடுகின்றேன்.

தன்னிடம் இது வரையில் எவரும்எழுத்துமூலமோ, நேரடியாகவோ இது தொடர்பில் தகவல் கோரவில்லை. என்னை கட்சியின் ஒழுக்காற்றுக் குழுவுக்கு அழைக்கப் போவ தாகவும், வேட்பாளர் பெயர்ப்பட்டியலில் இடமளிக்காதிருக்கப் போவதாகவும் வெளியிலிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

யார் கேட்டாலும் என்னிடம் ஒப்புவிக்க முடியுமான சாட்சிகள் உள்ளன. அரசியலில் தனது நண்பர்கள் பயன்படுத்துவதை பெரும்பாலானவர்களுக்கு தெரியும்.

நான் இதுவரையில்வெளிப்படுத்திய தகவல்களும் பொய்யாகவில்லை. இதனையும் நிரூபிப்பதற்கான சான்றுகள் உள்ளன. சங்கிரில்லாவிலா?, ஹில்டனிலா? எந்தக் கிளப்பின் மலசல கூடத்தில் வைத்து பயன்படுத்துகிறார்கள்? என்பதை நிரூபிக்க தன்னிடம் சான்றுகள் உள்ளன எனவும் ரஞ்சன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## கொக்கெய்ன் குற்றச்சாட்டு அனைவரையும் பாதிக்கிறது

### அமைச்சர் ஜோன் ஆதங்கம்



(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் கொக்கெய்ன் குற்றச்சாட்டு நியாயமில்லாத ஒன்று எனவும், இந்தச் சோதனை அனைவரையும் பாதிப்பதாகவும் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சரின் இந்தக் கருத்துக்குப் பின்னர் ஆட்களைக் கணக்கெடுக்க ஆரம்பித்துள்ளதாகவும், இது ஆரோக்கியமான ஒன்று அல்லவெனவும் அமைச்சர் ஜோன் தெரிவித்துள்ளார். (இ-7)

## தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்தவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை



(கொழும்பு)

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நிலையான அரசியல் தீர்வை வழங்க உத்தரவாதமளிக்கும் வேட்பாளரையே ஜனாதிபதித் தேர்தலில் ஈ.பி.டி.பி ஆதரிக்கும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இளைஞர் அணியின் பிரதிநிதிகள் குழு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை சந்தித்தபோது சுட்டிக்காட்டியது.

நேற்று முன்தினம்கொழும்பு டொரிங்கனில் அமைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்த ஈ.பி.டி.பியின் இளைஞர் அணியின் குழுவினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

சமகால அரசியல் மற்றும் எதிர்கால அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்ட அந்தச் சந்திப்பில் ஈ.பி.டி.பியினர் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண சபைக்கான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமல் அரசு காலம் தாழ்த்துவதை மக்களுக்கான ஜனநாயக மறுப்பாகவே கருதுகின்றோம் மாகாண சபைகளுக்கு தேர்தல் நடத்தப்பட்டு மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தின் கீழ் அந்தச் சபைகள் இயங்க வேண்டும். அப்போது தான் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முடியும்.

ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான கோரிக்கையையும், அபிலாஷைகளையும் அதன் நியாயத்தையும் புரிந்துகொண்டு, அதற்கு நிலையான தீர்வொன்றை வழங்குவதற்கு நாம் ஏற்கக்கூடியவாறான உத்தரவாதத்தை வழங்கும் வேட்பாளருக்கு எமது மக்களின் முழுமையான ஆதரவைப் பெற்றுத்தருவோம்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத்தருவதாகவும், அபிவிருத்தி உட்பட அன்றாடப்பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுத் தருவதாகவும், சர்வ தேச நீதிப்பொறிமுறை ஊடாக போர்க்குற்ற விசாரணையை முன்னெடுப்பதாகவும், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து தருவதாகவும், படையினர் வசமுள்ள தனியார் காணிகளை முழுமையாக மீட்டுத் தருவதாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக ஏற்றுக் கொள்ளத்தக்க விசாரணைகளை நடத்தி நீதியைப் பெற்றுத் தருவதாகவும், எமது இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதாகவும் வாக்குறுதி வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்தவர்கள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய எம்மைப் பொறுத்தவரை தமிழ் மக்களுக்கு நாம் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நாமே முன்னின்று உழைத்திருக்கின்றோம். அரசுகள் ஏமாற்றி விட்டன என்று கூறி தமிழ் மக்களை ஏமாற்றப் போவதில்லை. நாம் வழங்கும் வாக்குறுதிகளுக்கு நாமே பொறுப்பாளிகள் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எனவே மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! என்ற எமது அரசியல் வேலைத்திட்டத்திற்கு அமைய தென்னிலங்கை அரசியல் சக்திகளோடு பொதுவான வேலைத் திட்டங்களில் தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தி இணைந்தும், வடக்கு- கிழக்கு மாநிலத்தில் எமது தனித்துவத்தை முன்னிறுத்தியும் இணங்கிச் செயலாற்றுவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் என்றும் ஈ.பி.டி.பியின் இளைஞர் அணியின் குழுவினர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எடுத்துரைத்தனர். (இ-7)

### போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள்

## பெயர்ப் பட்டியலை கடிதம் மூலம் ரஞ்சனிடம் கோரிய சபாநாயகர்



(கொழும்பு)

கொக்கெய்ன் உள்ளிட்ட போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் 24 பேர் நாடாளுமன்றத்தில் இருப்பார்களானால் அவர்களின் பெயர்களை கடிதம் மூலம் அறிவிக்குமாறு, சபாநாயகர் கரு ஜெயசூரிய இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு அறிவித்துள்ளதாக தெரியவருகிறது.

இந்த விடயம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தொலைபேசியில் சபாநாயகரிடம் அறிவித்த போதே, சபாநாயகர் தொலைபேசியில் அறிவிக்காமல் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

அவ்வாறு கடிதம் மூலம் முறைப்பாடு கிடைத்தால் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடி முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக விருப்பதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## நான் நிரபராதி- அமைச்சர் ஹரிசன்



(குருநாகல்)

எந்தவிதமான தூள்களோ, கொக்கெயினோ, சாராயமோ, சிகரெட்டோ பயன்படுத்துவதில்லை எனவும் இதனால், இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் குற்றச்சாட்டிலிருந்து தான் நிரபராதி எனவும் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.

குருநாகலில்பொதுக்கூட்டமொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,அமைச்சர் ஹரிசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, வாழ்க்கையிலேயே மதுசாரத்தையோ சிகரெட்டையோ தான் பயன்படுத்தியதில்லையெனவும் அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். (இ-7)

## தெங்கு ஏற்றுமதியால் 95 மில். வருமானம்

(கொழும்பு)

தேங்காய்ஏற்றுமதி மூலம் கடந்த வருடத்தில் 95 மில்லியனை வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளதாகவும் 2022ஆம் ஆண்டுக்குள் இந்த வருமானத்தை இரட்டிப் பாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக. தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் உதய ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

2014ஆம்ஆண்டு தெங்கு பொருட்கள் ஏற்றுமதிக்கான வருமானம் 73 பில்லியனாகவும் அது 2018ஆம் ஆண்டில் 22 பில்லியனால் அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2017மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் நாட்டில் தேங்காய் உற்பத்தி மிகக் குறைந்து காணப்பட்டது. எனினும் தெங்கு உற்பத்திப் பொருட்களின் நிலை உயர்வடைந்ததாகவும் தெரிவித்த அவர், இக்காலகட்டங்களில் தெங்கு உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் அதிக அக்கறை காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டு தும்பு உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியினால் 4 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்ததாகவும் 2018 ஆம் ஆண்டில் அது 10 பில்லியனாக உயர்வடைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

09

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



## ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினத்தின் காணி நிர்வாகமும் படமாக்கலும்

போர்த்துக்கீசர் இலங்கையில் தம் ஆட்சியின்போது இலங்கையர்களின் பரம்பரையான பரிபாலன முறைகளை பெரிதும் மாற்றாது நிர்வாகத்தைக் கைக்கொண்டனர். போர்த்துக்கீசரின் ஆட்சியின் காலத்தில் யாழ்ப்பாணம் அதற்கு முன்னிருந்த வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப் பள்ளி என நான்கு பிரிவுகளாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதைவிட தீவுகளை உள்ளடக்கிய ஒரு பிரிவும் இருந்தது. போர்த்துக்கீசருக்குப் பின் இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தரும்இம்முறையையே நடைமுறைப்படுத்தினர். அதன் பின் ஆட்சி செய்த ஆங்கிலேயரும் ஆரம்பத்தில் இம் முறையையே நடைமுறைப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிர்வாக முறைமையில் பிரதேசத்திற்கு பிரதேசம் சிறிது வித்தியாசம் காணப்பட்டாலும்நாடு முழுவதும் இம் முறைமை பெருமளவு ஒத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஒல்லாந்தர் காலத்தில் மாகாணம் என்னும் சொல் ஒரு சிறிய பிரதேசத்தை குறிப்பதாகவும் இருந்தது.

யாழ்ப்பாணப்பட்டினத்தில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய நான்கு மாகாணங்களும் தீவுகளும் இருந்தன. ஒல்லாந்தர் தமது காலத்தில் நிர்வாகத்தை திறம்படச் செய்வதற்கு குறிப்பிட்ட இடங்களை வரையறுத்து படத் தயாரிப் பிலும் ஈடுபட்டனர்.

போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தை 33 கோவில் பற்றுக்களாகப் பிரித்திருந்தனர். (குறிப்பு:- சில நூல்களில் 32 கோவிற்பற்றுக்கள் என்றே கூறப்பட்டுள்ளன.) அவ்வாறே ஆட்சியைக் கைப்பற்றிய ஒல்லாந்தரும் யாழ்ப்பாணத்தை 33 கோவில் பற்றுக்களாகப் பிரித்து (வலிகாமம் மாகாணம் - 14 கோவில் பற்றுக்கள், தென்மராட்சி மாகாணம் - 5 கோவில் பற்றுக்கள், வடமராட்சி மாகாணம் - 3 கோவில் பற்றுக்கள், பச்சிலைப்பள்ளி மாகாணம் - 4 கோவில் பற்றுக்கள் மற்றும் தீவுகள் - 7 கோவில் பற்றுக்கள்) ஆலயங்களைத் திருத்தியும் புதிய ஆலயங்களைக் கட்டியும் ஒவ்வொரு ஆலயத்திற்கும் தமது மத குருமாரை அல்லது சட்டம்பியார் என்பவர்களை நியமித்து ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைகளை நடத்திக் கிறிஸ்தவ மத போதனைகளைக் கூறி தமது ஆட்சியை மேற்கொண்டிருந்தனர் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தில் உள்ள 33 கோவிற்பற்றுக்களிலும் போர்த்துக்கீசர் கட்டிய கோயில்களை ஒல்லாந்த கட்டடக் கலை மரபில் திருத்தி அமைத்தார்கள்.

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க ஆலயங்களும், பாடசாலைகளும் பெருமளவில் காணப்பட்டதனால் அந்த அமைப்புக்களை அப்படியே புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்களுக்கு மாற்றுவது இலகுவான காரியமாக இருந்தது.

புரட்டஸ்தாந்து மதத்தை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடனிருந்த ஒல்லாந்தர், சைவ மத நடவடிக்கைகளுக்கு இறுக்கமான கட்டுப்பாட்டை விதிக்காமைக்கு காரணம் சுதேச மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாததேயாகும்.

ஒல்லாந்தர் தீவுகளுக்கு தமது நாட்டின் பிரதேசப் பெயர்களையும் இட்டு அவ்விடங்களை அப் பெயர்களால் அழைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.


(தொடரும்...)

### ஒல்லாந்தர் தீவுகளுக்கு வைத்த பெயர்கள்


| தமிழ்ப்பெயர் | உச்சரிப்புக் கேற்ப டச்சமொழியில் பெயர் | வேறு டச்சப் பெயர் |
|---|---|---|
| அனலைதீவு | Annelletivo | Rotterdam / Donneclara* |
| நயினாதீவு | Naynativo | Haarlem |
| புங்குடுதீவு | Poengertivo | Middelburg |
| நெடுந்தீவு | Nedoentivo | Delft |
| காரைநகர் | Caretivoe | Amsterdam |
| ஊர்காவற்றுறை | Leijden | Kayts® |
| எழுவைதீவு | Elloewativo | Woest Eijland |

Donneclara*- போர்த்துக்கீசர் பெயர் Kayts®- ஆங்கிலப்பெயர்

### தீவுகளின் இடவிளக்கப்படங்கள்



நயினாதீவு




காரைதீவு




நெடுந்தீவு



அனலைதீவு



எழுவை தீவு



புங்குடுதீவு

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

176




அத்துடன் அவர் யாழ்ப்பாணத் தீபகற்பமெங்கும் உள்ள கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து அவ்வக் கிராமங்களிலும் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவச் சொல்லி ஊக்கமளித்தார்.

இதன் பெறுபேறாக பல புதிய பாடசாலைகள் இக் காலத்தில் உருவாகின. அவை மட்டுவில் கமலாசனி வித்தியாசாலை, கரணவாய் மாணிக்க வித்தியாசாலை, அல்வாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை, உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை, வல்வை சிவகுரு வித்தியாசாலை, அனலைதீவு சதாசிவ வித்தியாசாலை என்பனவாகும்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் முடிவில் நிறுவப்பட்ட இப்படியான பாடசாலைகள் மிக விரைவாக முன்னேறிக் கிழக்கு மாகாணம் வரையிற் கூட விரிவடைந்தன.

உதாரணமாக 1890 இல் சச்சிதானந்த பிரகாச சபை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் திருகோணமலைத் தமிழ் இளைஞர்கள் பின்வருமாறு பிரகடனப்படுத்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தீபகற்பத்தின் தமிழர் சைவத்தமிழ்க் கல்வியிலே கொண்டுள்ள அக்கறையாலும் சுயவுணர்வினாலும் பல சைவத் தமிழ்ப் பாடசாலைகளை நிறுவியுள்ளனர். இதை அவதானிக்கையில் நாமும் எமது சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணிக்காக்க அவர்களைப் போன்று செயலாற்றல் வேண்டும். எனவே எமது குறிக்கோள்களை எய்துவதற்குத் தயவுசெய்து உங்கள் ஆதரவை நல்குங்கள்.

ஒரு சைவத் தமிழ்ப் பாடசாலையையும் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையையும் கட்டுவதற்கு 30,000 ரூபாய்களுக்கு மேல் திரட்ட வேண்டுமென அவர்கள் திட்டமிட்டனர். 1895 களிலிருந்து ஐந்து வருடங்களில் அவர்களுடைய இலக்குகள் எய்தப்பட்டு பொதுமக்களின் ஆதரவுடன் இரண்டு பாடசாலைகளும் ஒழுங்காக நடத்தப்பட்டன என இந்து ஓகன் செய்தி வெளியிட்டுள்ளது.

திருகோணமலை முத்துக்குமாரசுவாமி கோவிலில் நடந்த ஒரு கூட்டத்தில் ஏறத்தாழ 300 நலன்விரும்பிகளும் ஏனைய கிராமங்களிலுள்ள சைவ முனைப்பாளரும் கலந்து கொண்டு

> “மட்டக்களப்புப் பிரதேசத்திலும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. புத்தளங்குடா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அப் பாட சாலையின் தலைமையாசிரியர் சதாசிவ உபாத்தியாயரின் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சைவசமயக் கலந்துரையாடல்கள் நிகழ்ந்ததாக இந்து ஓகன் தெரிவிக்கின்றது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் மேலும் பல சைவத்தமிழ்ப் பாட சாலைகள் நிறுவப்பட்டதென அறியமுடிகின்றது”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும்
## சமயம், பண்பாடு, மொழி
## சமூகம், பொருளாதாரம்
## (கி.பி. 1850-கி.பி. 1900)

ஒரு சைவப் பாடசாலையைக் கட்டுவதற்கென 3,000 ரூபாய்களை நன்கொடையாகச் சேகரித்தனர். இதேபோன்று மட்டக்களப்புப் பிரதேசத்திலும் சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன.

புத்தளங்குடா சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அப் பாடசாலையின் தலைமையாசிரியர் சதாசிவ உபாத்தியாயரின் தலைமையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சைவசமயக் கலந்துரையாடல்கள் நிகழ்ந்ததாக இந்து ஓகன் தெரிவிக்கின்றது. இதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் மேலும் பல சைவத்தமிழ்ப் பாடசாலைகள் நிறுவப்பட்டதென அறியமுடிகின்றது.

இவ்வாறு நாவலரின் முன்னோடி முயற்சியான சைவப் பாடசாலைகளை நிறுவும் திட்டம் பெரும்பாலும் அவரைப் பின்பற்றியோரின் பங்களிப்பினால் செழித்து வளர்ச்சியடைந்து இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 150 இற்கும் அதிகமான ஆரம்ப இடைநிலை சைவப்பாடசாலைகள் இலங்கையில் நிறுவப்பட்டன.

தமிழர் மத்தியில் கிறிஸ்தவத்தைப் பரப்பும் கிறிஸ்தவ மிஷனரிமாரின் மதமாற்று நடவடிக்கைகளுக்குச் சைவர்களின் எதிர்ப்பு எவ்வளவுக்குப் பெருந்தடையாக இருந்ததோ அந்தளவிற்கு நாவலர் வெளியிட்ட சமயப் பிரசாரமும் தடையாக இருந்தது.

இதேசமயம் இருபதாம் நூற்றாண்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த சைவத்தமிழ்ச் சமூகத்துக்கு சைவத்தையும் அதன் பாரம்பரியங்களையும் மேம்படுத்தும் செயற்பாடுகள் மேலும் அறிவூட்டின. சைவத் தமிழ், சைவ ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவியமையும் இந்த வகையிலே முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது.

ஒவ்வொரு பாடசாலையும் கிறிஸ்தவத்துக்கெதிரான தளமாக மாறியது மாத்திரமன்றி சைவசமயம் அதன் பாரம்பரியம் ஆகியவற்றின் அடையாளமாகவும் விளங்கியது. இப் பாடசாலைகள் தமிழ்ச் சமூகத்தின் சமய, கலாசார, சமூக மையங்களாகவும் இருந்து முக்கிய பங்காற்றின.

சமூகத்தின் மத்தியில் பெருமளவில் பல்வேறு கல்விசார்ந்த விளையாட்டு, கலாசார மாற்றம், சமூக ஒன்றிணைப்பு போன்ற கருத்தியல்கள், செயற்பாடுகள் மிகவும் உற்சாகத்துடன் முன்னெடுக்கப்பட்டன.

இருந்தபோதிலும் சாதியத் தடைகள், சீதன முறைமை போன்ற பல்வேறு முட்டுக்கட்டைகள் இருந்த காரணத்தினால் இந்தக் கல்வி முயற்சிகளினால் சமுதாயத்தின் கட்டமைப்பு எந்த வகையிலும் முழுமையாக மாற்றமடையவில்லை. இது இப்படியிருந்த போதும் பாரம்பரியம் பேணும் உண்மையான சைவ உயர்மட்டத்தினரை இக்கல்வி உருவாக்கியது.

தங்களது கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதே இவர்களது இலட்சியமாயிற்று. இன்றுள்ள நவீன சந்தர்ப்பத்தில் (20 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி) இது பழைமைவாதம் பேணும் உணர்ச்சியின் பாற்பட்ட சிந்தனையாகப் பார்க்கப்படலாம். அன்றைய காலத்தில் நிலவிய சமூக, கலாசார, அரசியல் சூழ்நிலைகளில் அவர்களது இரு கண்கள் போன்று இருந்த சைவசமயம், தமிழ்க் கலாசாரம் என்பவற்றை அந்நிய சக்திகளிடமிருந்து பாதுகாப்பதற்கு ஓரளவு உணர்ச்சியின் பாற்பட்ட அபிமானமும் பெருமையும் அத்தியாவசியமாக இருந்தன.

(தொடரும்)

# தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவராக கொல்லுரே நியமனம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் புதிய தலைவராக ஓய்வுபெற்ற பொது நிர்வாக அலுவலர் திலக் கொல்லுரே நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த ஆணைக் குழுவின் புதிய உறுப்பின ர்களாக ஓய்வுபெற்ற பொது நிர்வாக அலுவலரான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரத்ன, அஷோக்க விஜயதிலக உள்ளிட்ட மூவர் பெயரிடப்பட்டுள்ளதாக அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பரிந்துரைக்கப்பட்ட பெயர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், பேராசிரியர் சிறி ஹெட்டிகே, சாவித்திரி விஜேசேகர உள்ளிட்ட ஆணைக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலத்தை மேலும் மூன்று வருடங்களுக்கு நீடிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக நாடாளுமன்ற அரசியலமைப்பு பேரவை தெரிவித்துள்ளது.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திற்கமைய, தேசிய பொலிஸ் ஆணைக் குழு கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

மூன்று வருட பதவிக் காலத்தைக் கொண்ட ஆணைக்குழுவின் பதவிக்காலம் 2018 நவம்பர் மாதம் 14 ஆம் திகதியுடன் முடிவடைந்தது.

எனினும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்திற்கிணங்க, உறுப்பினர்கள் நியமிக்கப்படும் வரையும் ஆணைக்குழு முடக்கப்படவில்லை.

இதனிடையே, ஆணைக் குழுவின் தலைவராக செயற்பட்ட சீ.எச்.மனதுங்கவுடன் முன்னாள் பொலிஸ்மா அதிபரான ப்ரேன்க் டி சில்வா, அன்டன் ஜெகநாதன் உள்ளிட்ட உறுப்பினர்களும் அரசியலமைப்பு பேரவையால் நீக்கப்பட்டுள்ளனர்.

புதிய தலைவராக பரிந்துரைக்கப்பட்டுள்ள திலக் கொல்லுரே தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினராக இதற்கு முன்னர் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மகிந்த தலைமையிலான

# மொட்டுக் கட்சியினரிடம் தமிழ் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்

## சிறிநேசன் அறிவுரை



(கொழும்பு)

வாக்கு சேகரிக்க வரும் மொட்டுக்கட்சியினரிடம் தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டுமென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு ஸ்ரீவாசுகி அம்மன் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மொட்டுக்கட்சியினர் தேர்தலுக்காக வாக்கு சேகரிக்க தமிழர்களிடம் வருகின்றனர்.

அவருக்கு வாக்குகளைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சியில் நம்மவர்களில் சிலரும் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த காலத்தில் தமிழ் மக்களை கடத்தியமை, காணாமலாக்கியமை, நிலங்களை அபகரித்தமையென பல்வேறுபட்ட அநீதிகளை மேற்கொண்டவர்கள் மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக்காக வருவார்கள்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# முஸ்லிம்களின் பிரச்சினைக்கு அரபு நாடுகள் உதவும் என்று நினைப்பது முட்டாள்தனம்

## இராஜாங்க அமைச்சர் அமீர் அலி

(கொழும்பு)

தமிழர்களுக்கு பிரச்சினை என்றால் பேசுவதற்கு சர்வதேசம் இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு பிரச்சினைகள் வருகின்ற போது அரபு நாடுகள் எங்களுக்கு வந்து உதவும் என்று நினைத்து விடக் கூடாது.

அது ஒரு போதும் நடக்காது. அவ்வாறு நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள் என்றால் அதைவிட முட்டாள் தனம் வேறு எதுவும் கிடையாது என்று விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்ட இளைஞர் அமைப்பாளர்களுக்கு கட்சியின் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு மீராவோடை அந்நூர் கலாசார மண்டபத்தில் கல்குடா தொகுதி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் இளைஞர் அணி தலைவர் எம்.எப்.ஜெவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய தேசியக் கட்சியினர் ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜனாதிபதி உடனடியாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அப்படி நடத்தி மகிந்தவோடு சேர்ந்து ஜனாதிபதி வேட்பாளராக வரமுடியும் என்று அவர் கனவு காண்கின்றார். அது நடக்காது.

மாற்றத்தை நோக்கிய பயணத்திலே இந்த இளைஞர் அமைப்புக்கள் செல்ல வேண்டும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் இளைஞர் என்றால் அது நம்பிக்கைக்குரியவர்கள், ஒரு மாற்றத்திற்கான இளைஞர்கள், தான் சார்ந்த சமூகம், தனது பிரதேசம் என்பவற்றில் மதிப்புக்குரிய இளைஞர்கள் என்று பெயரை பெற்றுக் கொள்கின்றவர்களாக திகழ்வதோடு அரசியல்வாதிகள் செய்கின்ற அபிவிருத்தி வேலைகளுக்கு பங்களிப்பு செய்கின்றவர்களாகவும் திகழ வேண்டும்.


இன்று தமிழர்களுக்கு பிரச்சினை என்றால் பேசுவதற்கு சர்வதேசம் இருக்கின்றது. சிங்கள சமூகத்திற்கு இருக்கின்ற அரசியல் பின்னணி எங்களுக்குக் கிடையாது. நீங்கள் யாரும் பிரச்சினைகள் வருகின்ற போது அரபு நாடுகள் எங்களுக்கு வந்து உதவும் என்று நினைத்து விடக் கூடாது. அது ஒரு போதும் நடக்காது. அவ்வாறு நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள் என்றால் அதைவிட முட்டாள் தனம் வேறு எதுவும் கிடையாது.

மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் பிரச்சினைகளை எந்த ஒரு முஸ்லிம் நாடும் தட்டிக் கேட்கவில்லை. ஒவ்வொரு நாடும் அவர்களது தேவைக்காகத் தான் நடந்துகொள்வார்கள் என்றும் அமீர் அலி தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1650

### சுக்ரன்

சாலையில் நான் கண்ட அருமையான விழிப்புணர்வுப் பலகை




### ரவிகிருஷ்ணா

நிராசையாகிப் போனாலும் பரவாயில்லை... எப்போதும் உயர்ந்த இலக்குகளைக் குறி வையுங்கள்



### கோகுலன்

கமரா லென்ஸ்ட ரவுண்டா தான் இருக்கு... ஆனா போட்டோ மட்டும் எப்படி சதுரமா வருது...




### குமார்

கையேந்தி வருபவரிடம் மனிதனாக இருங்கள்... கல்லாக நின்று கடவுளாகி விடாதீர்கள்



### ராமன்

தவறான பாதையில் வேகமாக ஓடும் மானாக இருப்பதை விட சரியான பாதையில் நகரும் ஆமையாக இருக்க வேண்டும்



### சுமன்

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன... ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கின்றன- பில்கேட்ஸ்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## தொழிலுக்கு மேலதிகமாக சட்டவிரோத நடவடிக்கையில் மீனவர்கள்

# போதைப்பொருள், ஆட்கடத்தலைத் தடுக்க

# மீன்பிடிப் படகுகளுக்கு விசேட சமிக்ஞை

## அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



(கொழும்பு)

**படகு மூலம் நாட்டிற்குள் போதைப்பொருள் கடத்துவதையும் ஆட்களை சட்ட விரோதமாகக் கடத்திச் செல்வதையும் இல்லாதொழிக்கும் வகையில் மீனவர்களின் மீன்பிடிப் படகுகளுக்கு சமிக்ஞை முறையொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக விவசாய மற்றும் கடற்றொழில் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.**

மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலுக்கு மேலதிகமாக சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக மீன்பிடிப் படகுகளில் போதைப்பொருட்களை நாட்டிற்கு கொண்டு வருதல் ஆட்களை வேறு நாடுகளுக்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லும் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்றவை இடம்பெற்று வருகின்றன.

நாம் இது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதுடன் கடற்றொழில் அமைச்சு மற்றும் கடற்றொழில் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். இதற்கிணங்க அனைத்து மீன்பிடிப்படகுகளுக்கும் சமிக்ஞை தொகுதியைப் பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2500 மீன் பிடிப் படகுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதில் பெரும்பாலானவை தொடர்பில் வழக்குகளும் உள்ளன.

இந்த வகையில் முதற்கட்டமாக 1500 மீன் பிடிப் படகுகளுக்கு விசேட சமிக்ஞை தொகுதிகள் பொருத்தப்படவுள்ளன.

அவ்வாறு சமிக்ஞை தொகுதி பொருத்தப்படும் போது ஆழ்கடலின் எப்பகுதியில் குறித்த மீன்பிடிப் படகு உள்ளது எனவும் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பிலும் அப்படகு எமது நாட்டின் எல்லையை கடந்து செல்கின்றதா என்றும் அதன் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

மீனவர்களின் ஒத்துழைப்பு கிடைக்குமானால் இந்த செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொண்டு நாட்டிற்குள் போதைப்பொருட்களைக் கொண்டு வருவதையும் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கொண்டு செல்வதையும் தடுக்க முடியும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாக்.உயர்ஸ்தானிகர் அமைச்சர் ஹக்கீம் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் முன்னாள் மேஜர் ஜெனரல் கலாநிதி. ஷாஹித் அஹமத் ஹஷ்மத் நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்று முன்தினம் உயர் கல்வி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

பரஸ்பர ஈடுபாடு மற்றும் ஒத்துழைப்பு போன்ற துறைகளிலான இருதரப்பு உறவுகள் மற்றும் தக்ஷில்லா கந்தாரா நாகரீக கற்கை நிலையத்தினை இலங்கையில் நிறுவுவது தொடர்பான வாயப்புக்கள் குறித்தும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

பாகிஸ்தான்மற்றும்இலங்கைக்கிடையிலான உயர் கல்வி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் இலங்கை மாணவர்களுக்கு வழங்கப்படவிருக்கின்ற புலமைப்பரிசில்கள் தொடர்பாக பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகரால் அமைச்சருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

உயர்ஸ்தானிகர் பணியகம் இலங்கையின் பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்துடன் இணைந்து பாகிஸ்தானின் கந்தாரா பாரம்பரியம் மற்றும் இருநாடுகளுக்கிடையிலான கலாசார தொடர்புகள் குறித்த சர்வதேச கருத்தரங்கை இலங்கையில் மார்ச் மாதமளவில்ஏற்பாடுசெய்துள்ளது என உயர்ஸ்தானிகர் இதன் போது அமைச்சரிடம் தெரிவித்தார்.

இலங்கை இளைஞர்களின் திறன்களை அபிவிருத்தி செய்வதன் நிமித்தம் பாகிஸ்தானிய அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வாய்ப்புகள் மற்றும் பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகராலயத்தின் முயற்சிகளுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் இதன்போது தனது பாராட்டுக்களை தெரிவித்தார். (இ-7)

# தூக்கு மேடைக்கு புதிய கயிறு வாங்க வேண்டிய அவசியமில்லை

## நீதியமைச்சர் தலதா கூறுகிறார்



(கொழும்பு)

தூக்கு மேடைக்கு புதிய கயிறு வாங்க வேண்டிய அவசியமில்லை என நீதி அமைச்சர் தலதா அத்துகோறள தெரிவித்துள்ளார்.

தூக்கு மேடையில் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வரும் கயிறு சிறந்த தரத்தில் உள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்தக் கயிறு தரப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் புதிய கயிறு கொள்வனவு செய்யப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மரண தண்டனை தொடர்பில் பேசப்பட்டு வரும் நிலையில் தூக்கு மேடையின் நிலை குறித்து ஆராய்வது அமைச்சின் செயலாளரது பணியாகும், இதனை சிலர் திரிபுபடுத்தி கயிறு கொள்வனவு செய்ய உள்ளதாக பிரசாரம் செய்துள்ளனர் என அவர் கொழும்பு ஊடகமொன்றுக்கு சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# மதூஷின் வழி நடத்தலில் இயங்கிய லொக்கு ஐயாவின் தொலைபேசி அரச இரசாயன பரிசோதனைக்கு

(கொழும்பு)

பன்னிப்பிட்டியில் 700 கோடி ரூபாய் பெறுமதியான இரத்தினக் கற்கள் மற்றும் வைரங்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுத் தலைவரான மாகந்துரே மதூஷின் வழி நடத்தலின் கீழ் இயங்கியவரின் தொலைபேசி அரச இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பாதுக்கையில் கைது செய்யப்பட்ட, ஒருவல - அதுருகிரிய பகுதியை சேர்ந்த குறித்த நபர், லொக்கு ஐயா எனப்படும், நவீந்ர நாலக ரணசிங்க என அடையாளம் காணப்பட்டுள்ளார்என பொலிஸ்ஊடக பேச்சாளர், ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், நீதிமன்றத்தின் உத்தரவிற்கு அமைய குறித்த தொலைபேசி இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளைபலகொள்ளை சம்பவங்கள் தொடர்பில் நேற்று முன்தினம்கைது செய்யப்பட்ட மாகந்துரே மதூஷுடன் நெருங்கிய தொடர்பை கொண்ட வெடிகந்தே கசுன் என அறியப்படும் கசுன் தனஞ்ஜய என்ற 31 வயதுடையவர் நுகேகொட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (இ-7)

# ஒருதொகை தங்க ஆபரணங்களுடன் ஒன்பது பேர் கட்டுநாயக்கவில் கைது



(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து சட்ட விரோதமான முறையில் தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளை இலங்கைக்கு கடத்த முற்பட்ட 9 பேரை சுங்க அதிகாரிகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

சிங்கப்பூரிலிருந்து டுபாய்க்கு பயணித்து டுபாயிலிருந்து இலங்கைக்கு வந்தபோதே நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு, மருதானை, நீர்கொழும்பு, சீதுவ, சிலாபம் மற்றும் கண்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

அத்துடன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட 2 கிலோ 974 கிராம் தங்க நகைகள் மற்றும் தங்க பிஸ்கட்டுகளின் பெறுமதி சுமார் 17 மில்லியன் ரூபா எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# கூட்டு ஒப்பந்தத்திலிருந்து விலகி சென்றாலே வெற்றி

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழி லாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்த முறைமையிலிருந்து விடுபட்டு எவ்வாறு புதிய வேலைத்திட்டத்தை முன் கொண்டு செல்லப்போகின்றோம் என்பதிலேயே எதிர்கால வெற்றி தங்கியுள்ளது என தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்துள்ளது.


நானுஓயாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.திலகராஜ் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 60 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 80 | 85 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 140 | 140 | 160 | 200 |
| தக்காளி | 40 | 30 | 50 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 70 | 40 | 60 |
| கோவா | 50 | 50 | 50 | 50 | 60 |
| கரட் | 120 | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 40 | 30 | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 30 | 60 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 120 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 80 | 100 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 | 40 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 40 | 60 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 40 | 120 |
| லீக்ஸ் | 100 | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 30 | 25 | 50 | 40 | 50 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 400 | 600 |
| போஞ்சி | 50 | 60 | 80 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | — | 50 | 70 |
| கீரை -1பிடி | 30 | 30 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 50 | 60 | 60 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 100 | 140 | 120 | 100 | 130 |
| வெங்காயப்பூ | 40 | 60 | 60 | 60 | 120 |
| முள்ளங்கி | 30 | 50 | 40 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 50 | — | 40 | 110 | 80 |




# தங்க நாணயம்



ஒரு ஊரில் ராமசாமி என்ற சுயநலமிக்க செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் ஊருக்கு சென்று திரும்பும் வழியில் 30 தங்க நாணயங்கள் இருந்த பையை தொலைத்துவிட்டார். இதனால் வருத்தமடைந்த செல்வந்தர் தனது நண்பர் குருவிடம் நடந்ததை கூறி புலம்பினார்.

சில நாட்கள் கழித்து குரு ஊரிலிருந்து திரும்பும்போது வழியில் ஒரு பையில் தங்க நாணயங்கள் இருப்பதைக் கண்டார். அந்தப் பை ராமசாமியுடையது எனத் தெரிந்து கொண்ட குரு அதை அவரிடம் கொடுத்தார்.

குருவிடமிருந்து தங்க நாணயங்கள்ளைப் பெற்றுக் கொண்ட ராமசாமி, இதை வைத்து ஒரு திட்டம் தீட்ட நினைத்தான். அவன் குருவிடம், நான் இந்த பையில் 40 தங்க நாணயங்களை வைத்திருந்தேன். இந்தப் பையில் இப்போது 30 தங்க நாணயங்களே உள்ளன. அதனால் மீதமிருக்கும் 10 நாணயங்களை திருப்பித் தரவேண்டுமென குருவிடம் கூறினார்.

குருவோ மிகவும் நல்லவர். பிறரின் பொருட்களுக்கு ஆசைப்படாத அவரது குணத்தைப் பற்றி அனைவருக்கும் தெரியும்.

இதனால் இந்தக் குழப்பத்திற்கு முடிவுகட்ட நண்பர்கள் இருவரும் ஊர் தலைவரிடம் சென்றனர். விபரத்தைக் கேட்ட ஊர் தலைவர், ராமசாமியிடம் நீ எவ்வளவு தங்க நாணயங்களைத் தொலைத்தாய் எனக் கேட்டார். அதற்கு அவர் 40 தங்க நாணயங்கள் எனப் பொய் கூறினான். இப்போது ஊர்த்தலைவர் குருவை பார்த்து நீ எவ்வளவு தங்க நாணயங்களைக் கண்டு பிடித்தாய் என்றார். அதற்கு அவர் 30 தங்க நாணயங்கள் என்றார்.

இருவரின் பதிலையும் கேட்ட ஊர்த்தலைவர் ராமசாமியைப் பார்த்து, குரு கண்டறிந்திருப்பது வெறும் 30 தங்க நாணயங்கள், நீ தொலைத்திருப்பதோ 40 தங்கநாணயங்கள். எனவே இது உன்னுடையதாக இருக்க முடியாது. இனி யாராவது 40 தங்க நாணயங்களைக் கொண்டுவந்தால் உனக்குச் சொல்லி அனுப்புகிறேன், இப்போது நீ கிளம்பலாம் என்றார்.

இப்போது குருவைப் பார்த்த தலைவர் நீ கண்டுபிடித்திருப்பது ராமசாமியின் தங்க நாணயங்கள் கிடையாது, எனவே இதை நீயே வைத்துக்கொள்ளலாம் என்றார்.

திருடனுக்குத் தேள் கொட்டிய கதை போல, ஊர்த்தலைவரின் தீர்ப்பை கேட்ட ராமசாமிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. தான் கூறிய பொய்யால் தனக்கு நேர்ந்த சங்கடத்தை எண்ணி வருந்தப்பட்டார்.

தனது தவறை உணர்ந்த அவர், இனி சுயநலமில்லாத நேர்மையான மனிதராக வாழவேண்டும் என முடிவு செய்தார்.

# பொன் மொழிகள்

- இருப்பது எல்லாமே என்றென்றும் நீடிக்கும் என்று கடந்த காலம் கூறுகிறது. உலகம் மாறும். ஆனால் ஆன்மாவும் கடவுளும் மாறாது. சாம்பலை விட்டுவிடு நெருப்பில் தங்கம்தான் மிஞ்சுகிறது.
- புயலுக்கு பறவை சாயாமல் சரி செய்வதைப்போல காலப் புயலில் உன்னை சரி செய்து கொள்.
- பயத்தை நீக்கு வாழ்க்கைக் கப்பலை நேராக செலுத்து.
- கப்பலுக்கு ஏற்ற துறைமுகம் அருகே வந்துவிட்டது ஒவ்வொரு அலையும் சந்தோசத்தில்....
- மகிழ்ச்சி என்பது சில பொருட்களால் கிடைப்பதில்லை. உங்களுடைய சொந்த நடவடிக்கையிலிருந்து உற்பத்தியாகிறது.
- வாழ்வை எண்ணத்தாலும் செயலாலும் அளக்க வேண்டும், காலத்தால் அல்ல.
- உன் தலைவிதி எதுவானாலும் நன்றியுள்ள சந்தோசமான இதயத்தை கடவுளிடம் திருப்பித்தர தயாராக இரு.
- உனக்கு வயதாகும். ஆனால் வாழ்வின் துடிப்பை இழந்துவிடாதே.. ஏனெனில் தெருவின் இறுதி வளைவு தான் சிறந்த வளைவு.
- ஒவ்வொரு வருடமாக வாழ்வை வாழ்... எதிர்காலத்தை நோக்கி தளராத இதயத்துடன் இரு இலட்சியத்தை விட்டு விலகாதே.
- ஒவ்வொரு பெரிய போராட்டம் அல்லது தோல்வி இவற்றிலிருந்து ஒரு புதிய விடியல், வாழ்வின், உயிரின் மறுபிறப்புதோன்றி முன்னேற்றத்தின் சக்திவாய்ந்த அலை மனிதனை மேலும் மேலும் உயர்த்தியே வருகிறது.
- பயணம் கரடுமுரடாக அல்லது வழுவழுப்பாக இருக்கட்டும். நீ மட்டும் சந்தோசத்தை இழந்துவிடாதே.

# பொது அறிவு

- அயோத்தி பாபர் மசூதி இடிப்பு விவகாரத்தை விசாரிக்க அமைக்கப்பட்ட கம்மிசியன் எது?

  **லிபரான் கமிஷன்**
- சேதுசமுத்திரம் கால்வாய் பற்றிய கண்டறிய அமைக்கப்பட்ட குழு எது?

  **ஆர். கே. பச்சோரி கமிட்டி**
- ராஜீவ் காந்தி படுகொலையின் உண்மை நிலவரத்தை கண்டறிய அமைக்கப்பட்ட கமிஷன் எது?

  **ஜெயின் கமிஷன்**
- பிற்படுத்தப்பட்டவர் களுக்கான இட ஒதிக்கீடு பற்றி கண்டறிய அமைக்கப்பட்ட கமிஷன்?

  **மண்டல் கமிஷன்**
- இந்தியாவின் பரப்பளவு?

  **32,87,263 ச.கி.மீ**
- வடக்கே காஷ்மீர் முதல் தெற்கே கன்னியாகுமரி வரை உள்ள தூரம் ?

  **3214 கி.மீ.**

## உண்மைச்சேய் நீ!

நோய் நொடியின்றி
நூற்றாண்டு வாழ்ந்திட - நீ
பாய் படுக்கையிலே
படாமல் வாழ்ந்திட - நீ
தாய் தந்தையரை
தாங்கியே காத்திடு - நீ
ஏய் என்றொருசொல்
ஏசாது பார்த்திடு - உண்மை
சேய்நீ என்றே
சொந்தமெலாம் புகழ்ந்திடவே!

# ஆரோக்கிய உடல்



உற்றுப்பார் உற்றுப்பார் உடலின்
உறுப்புக்களை உற்றுப்பார்
ஒவ்வொரு உறுப்பும் முக்கியமே,
உடலின் செயல்களும் முக்கியமே

அழகு என்பது மறைவதுவே,
ஆரோக்கியம் மட்டும் உன் வாழ்வு
உடலின் உறுப்புக்கள் செயல்களிலே
ஒழுங்கு என்பது நடைமுறையே

உறுப்புக்கள் ஆயிரம் இருந்தாலும்
ஒழுங்கு என்பது முக்கியமே.
மூளையின் செயல்களின் முக்கியத்தால்
எல்லா உறுப்புக்கள் இயங்கிடுமே

இருதயம் நன்கு துடிப்பதினால்
உடலுக்கு இரத்தம் பரவிடுமே
உண்ணும் உணவை ஜீரணிக்க
ஜீரண உறுப்புக்கள் செயற்படுமே

இரத்தத்தின் அசுத்தத்தை நீக்கிவிட
சிறுநீரகம் உறுப்பு செயற்படுமே
கழிவுகள் உடனே வெளியேற
அதற்கென உறுப்புக்கள் தனி உண்டு!

ஆயிரம் நரம்புகள் சென்றாலும்
அதனதன் பாதைகள் தனித்தனிதான்
எல்லா நரம்புகள் நம் உடலை
எலும்புடன் இணைத்து வழி நடத்தும்

இத்தனை செயல்கள் நடைபெறவே
தவறுகள் இல்லா பழக்கங்களை
எல்லா நாட்களும் மேற்கொள்வாய்

நான் சிந்திக்கிறேன். எனவேதான் நான் வாழ்கிறேன்.

~ டெக்கார்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பிரதேச செயலகங்கள் பொறுப்பெடுக்க வேண்டும்

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகவே ஏழை மக்களின் நிலைமை உள்ளது.

வீட்டுத் திட்டம் வழங்குவதாகக் கூறிவிட்டு மணலைப் பெறுவதற்கு எந்த ஏற்பாடும் செய்து கொடுக்காவிட்டால், வீட்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது எங்ஙனம் என்பதை பிரதேச செயலகங்கள் தங்களுக்கு மேலான அதிகாரிகளிடம் கேட்க வேண்டும்.

யுத்தத்தின் காரணமாக எமது மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்ததுடன் தொழில் முயற்சிகளையும் இழந்து கந்தறு நிலையில் உள்ளனர்.

பேரினவாதம் தமிழ் மக்களை நசுக்காமல் இருந்திருந்தால், தமிழ் மக்கள் இடப்பெயர்வை எதிர்நோக்காமல் தமது சொந்த இடங்களில் தொடர்ந்து வாழ்ந்திருந்தால் எங்கள் மக்களின் வாழ்வியல் மிகப் பெரும் உச்சத்தைத் தொட்டிருக்கும்.

விவசாயத்தில் உச்சம், கைத்தொழில் மற்றும் வர்த்தக முயற்சிகளில் பெரு வளர்ச்சி என்பவற்றுக்கு அப்பால், இலங்கைத் திருநாட்டில் மிக உன்னதமான கல்வியாளர்களும் மாணவர்களும் உடைய பெருவளத்தை எங்களின் சொத்தாகக் கொண்டிருந்திருப்போம்.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. சொத்திழந்து, சொந்த நிலம் இழந்து, குடும்ப அங்கத்தவர்களைப் பறிகொடுத்து, உறவுகளைத் துறந்து எங்கெங்கோ வாழ்கின்ற பரிதாபத்தில் நம் மக்கள் இருக்கின்றனர்.

இந்நிலையில் ஏதோ பிச்சை போடுவது போல வீட்டுத் திட்டத்தை வழங்கிவிட்டு அத்திபாரத்தை வெட்டிக் கட்டியபின்பே முதற்கட்ட கொடுப்பனவு என்றால், எதை வைத்து அத்திபாரம் வெட்டுவது, கட்டுவது.

பிரதேச செயலக அதிகாரிகள் பார்வையிட வரப்போகிறார்கள் என்பதற்காக காதில் கிடந்ததை விற்றும் வட்டிக்குக் கடன் பெற்றும் அத்திபாரம் வெட்டிக் கட்டினால்,

இருந்ததையும் இழந்து நாளும் பொழுதும் வட்டி வளர்வதாகவே நிலைமை இருக்கும்.

இவ்வாறாக வீட்டுத் திட்டத்துக்காக வாங்கிய கடன் வீட்டையும் காணியையும் இழக்கும் அளவுக்கு நிலைமையைக் கொண்டு போகிறது.

எனவே வீட்டுத் திட்டத்தை வழங்குவதாக இருந்தால், முதற்கட்டக் கொடுப்பனவை வழங்கி அதற்குரிய வேலை நிறைவடைகிறதா என்பதைக் கண்காணிப்பதும் தொடர்ந்து அடுத்த கட்டக் கொடுப்பனவை வழங்குவதுமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறான ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் கடன்படுதல், தேவையற்ற வட்டிக் கொடுப்பனவு என்ற சுமைகளில் இருந்து எங்கள் ஏழை மக்களைப் பாதுகாக்க முடியும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக வீட்டுத் திட்டத்துக்கான மணலை வழங்குகின்ற பணியை அந்தந்த பிரதேச செயலகங்கள் பொறுப்பெடுக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் வீட்டுத்திட்டத்தை விரைவுபடுத்தவும் கள்ளச் சந்தையில் ஏகப்பட்ட பணச் செலவில் மணல் கொள்வனவு செய்கின்ற அவலத்தைத் தடுக்கவும் இயலும்.

இது விடயத்தில் வடக்கின் ஆளுநர் மற்றும் மாவட்ட செயலாளர்கள் கருசனை கொண்டால் அது எங்கள் மக்களுக்குப் பேருதவியாக அமையும்.

# மாகாண சபைக்கான தேர்தலை விரைவாக நடத்த வேண்டும்

## கட்சித் தலைவர் கூட்டத்தில் கோரிக்கை

மாகாணசபை தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதித் தீர்மானம் எடுக்கவும் அடுத்த கட்சி தலைவர் கூட்டத்திற்கு சட்டமா அதிபரை வரவழைத்து அவரின் ஆலோசனையை பெற்றுக் கொடுக்கவும் அடுத்த கட்ட நகர்வுகளை கையாளவும் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்கட்சிகள் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில் சபாநாயகர் தலைமையில் அது குறித்து ஆராய அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய நேற்று பாராளுமன்றத்தில் விசேட கட்சி தலைவர் கூட்டம் கூடியது. இதன்போது மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது குறித்து தீர்மானம் மேற்கொள்ளும் வகையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் பாராளுமன்றத்திலுள்ள சபாநாயகர் அலுவலகத்தில் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடிய விசேட கட்சி தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் மகிந்த சமரசிங்க, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியூதின், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென கட்சித் தலைவர்களினால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பழைய முறைமையிலா அல்லது புதிய முறைமையிலா தேர்தலை நடத்த வேண்டும் என கட்சித் தலைவர் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதன்போது தேர்தலை பிற்போட வேண்டாம் எனவும் எந்த முறையிலேனும் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில் பழைய முறையில் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

எனினும் சிறுபான்மை கட்சியினர் தமக்குள்ள பிரச்சினைகள் தொடர்பாக அங்கு தெளிவுபடுத்தியதுடன் அது தொடர்பாக இறுதி நிலைப்பாட்டை எடுப்பதற்காக ஜனாதிபதியுடன் கலந்துரையாட தீர்மானித்துள்ளதாகவும் அறிவித்துள்ளனர்.

ஆகவே அடுத்த சில தினங்களில் ஜனாதிபதியுடன் நடத்தப்படவுள்ள சந்திப்பின் பின்னர் சட்ட மா அதிபரை கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு அழைப்பதற்கும் அடுத்த கட்சித் தலைவர் கூட்டத்தில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெறறுக்கொண்டு அடுத்த கட்ட தீர்மானம் எடுக்கவும் கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ம-3)

# சமூகத்துக்காகவே பத்திரிகையாளர்கள் தமது கடமைகளை செய்கிறார்கள்

## அவர்களின் கடமைக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது; பொலிஸாருக்கு யாழ்.மாவட்ட நீதவான் அறிவுரை

சமூகத்துக்காகவே பத்திரிகையாளர்கள் கடமையாற்றுகிறார்கள். அவர்களின் கடமைக்கு இடையூறு வழங்கக் கூடாது. பத்திரிகையாளர்களை தாக்கவோ தாக்க முயற்சிக்கவோ கூடாது" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல் பொலிஸாரை அறிவுறுத்தினார்.

கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம்இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடரபான செய்தியை காணொளிப் பதிவைச் செய்து கொணடிருந்த ஊடகவியலாளரைத் தாக்கிய கோப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியை எச்சரித்த நீதவான், அவரை பிணையில் விடுவித்து வழக்கை ஒத்திவைத்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஊடகவியலாளரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அதனடிப்படையில் கோப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி அவரது பணியிலிருந்து இடைநீக்கப்பட்டதுடன், விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

ஊடகவியலாளரைத் தாக்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரிக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு மன்றில் அழைக்கப்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மன்றில் முன்னிலையாக வில்லை. அவர் சார்பில் மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் முன்னிலையானார்.

சந்தேகநபர் உடல்நலக் குறைவு காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

அதனால் சந்தேகநபரை வைததியசாலையில் வைத்து விசாரிக்க பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதிவான் ஏ.எஸ்.பி.போல், யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்குச் சென்றார்.

சமூகத்துக்காகவே பத்திரிகையாளர்கள் கடமையாற்றுகிறார்கள். அவர்களின் கடமைக்கு இடையூறு வழங்கக் கூடாது. பத்திரிகையாளர்களை தாக்கவோ தாக்க முயற்சிக்கவோ கூடாது.

சந்தேகநபருக்கு எச்சரிக்கப்பட்டு பிணை வழங்கப்படுகிறது. 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ஆள் பிணையில் விடுவிக்கப்படுகிறார்" என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதவான் அந்தோனி சாமி பீற்றர் போல் உத்தரவிட்டார்.

அத்துடன், வழக்கை வரும் மார்ச் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான், அன்றைய தினம் சாட்சியையும் மன்றில் முன்னிலையாக அழைப்புக் கட்டளை அனுப்புமாறு உத்தரவிட்டார். (ம-3,10)

### மாணவன் தாக்கப்பட்டமை தொடர்பில்

# மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

தீவகப் பாடசாலை மாணவன் ஒருவன் பாடசாலை அதிபரால் தாக்கப்பட்டமை தொடர்பிலும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படாமை தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய பணிப்பாளர் தி.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவன் ஒருவன் முகச்சவரம் செய்யாது பாடசாலைக்கு வருகை தந்தார் எனத் தெரிவித்து பாடசாலை அதிபரால் தாக்கப்பட்டதாகவும் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்காமை தொடர்பிலும் கடந்த 18ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் குறித்த மாணவனால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இவ் முறைப்பாடு தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் விசாரணைகளை மேற்கொள்வதாகவும் நடைபெற இருக்கும் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு குறித்த மாணவன் தோற்றுவதற்குரிய ஏற்பாடுகளை தாம் செய்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை கிளிநொச்சி பிரதேசத்தில சமணலங்குளம், குளவிசுட்டான், நெடுங்கேணி, றம்பைக்குளம், தண்டுவன், ஒலுமடு, சேனைப்புலவு, ஒதியாமலை, பட்டிக் குடியிருப்பு, மருதோடை, கற்குளம் கோவில் புளியங் குளம், பெரியமடு, சின்ன அடம்பன், நைனாமடு, மதியா மடு, நொச்சிக்குளம், பழைய வாடி, நெடுங்கேணி பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், நெடுங்கேணி மொபிட்டல் கோபுரம், நெடுங்கேணி நீர்ப்பாசன சபை, தண்டுவன் பழப்பதனிடும் நிலையம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பெரியகரைசல் பிரதேசத்திலும் மின் தடைப்படும்.

# சத்திய தரிசனம்

## அமைதி கொடு இறைவா



❖ உடலை அளித்த தாயையும், உணவை அளித்த தந்தையை யும், அறிவை அளித்த ஆசிரியரையும் ஒரு போதும் மறக்கக் கூடாது.

❖ ஐம்புலன்களும் வேலை செய்யும் வரை தான் வாழ்க்கை நீளும். அவை அடங்கிவிட்டால், உடலுக்குரிய மதிப்பு குறைந்துவிடும்.

❖ கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றினால் நம்முடைய மனதுக்குக் கிடைக்கும் மனநிறைவே சொர்க்கம்.

❖ கடமையைக் கருத்துடன் செய்வதே மனிதரின் பொறுப்பு. அதற்குப் பலன் அருள்வது இறைவனின் வேலை.

❖ அனைத்து உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தப் பழகிக்கொள்ளுங்கள். இறைவன் உங்களிடம் எதிர்பார்க்கும் பக்தியின் அடிப்படை இதுதான்.

❖ நம்முடைய மனத்தைப் பக்குவப்படுத்தி நல்ல பண்புகளை ஏற்படுத்துவதற்காகத் தான் நம் வாழ்வில் இறைவன் சோதனைகளைக் கொடுக்கிறார்.

❖ கடவுளிடம் "மன அமைதியைக் கொடு" என்று வேண்டிக்கொண்டால் போதும், அதுவே சுகமானதும், நியாயமானதுமான பிரார்த்தனையாகும்.

# ஜெனோசன் சிறப்பாட்டம் சென்றலைட்ஸ் அணி வெற்றி




கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், யாழ்.மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் அணிக்கு 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. இதில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி, முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. 29.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 151 ஓட்டங்களை எடுத்தது. துடுப்பாட்டத்தில் நிதர்சன் 41, துவாரகசீலன் 20, பண்டார 19, கல்கோவன், செந்தூரன் தலா 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றலைட்ஸ் அணி சார்பாக, நிரோசன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஜெரிக் துசாந்த் 24 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

152 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய சென்றலைட்ஸ் அணிக்கு ஜெனோசன் தனியாளாக நின்று அதிரடி காட்டி அரைச்சதம் பெற்று, அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். சென்றலைட்ஸ் அணி, 25.2 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் நாகராசா ஜெனோசன் 71 ஓட்டங்களையும், பிரியலக்சன் 38 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக பண்டார 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். (க-26)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# சுரேந்திரன் அசத்தல் கொக்குவில் கிங்ஸ் வெற்றி




NELLAI BLASTERS விளையாட்டுக்கழகம் நடத்தும் NBCM தொடரில் நேற்று நடைபெற்ற 16 ஆவது போட்டியில் KOKUVIL KINGS அணியினை 5 இலக்குகளால் வீழ்த்தியது அரியாலை.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற அரியாலை கில்லாடிகள் களத்தடுப்பை தேர்வு செய்ய முதலில் ஆடிய கொக்குவில் கிங்ஸ் 9 விக்கெட்டுகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பாக ரம்மியராகுலன்-28, பிரதீஸ்-13 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க அரியாலை சார்பாக பந்து வீச்சில் கபில்-3, அலன்ராஜ்-3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

81 ஓட்டங்களை வெற்றி இல்க்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அரியாலை 5 விக்கெட்டுகளை மாத்திரமிழந்து 81 ஓட்டங்களைப் பெற்று 5 இலக்குகளால் வெற்றி பெற்றது. அணி சார்பாக அஜித்-24, சுரேந்திரன்-15 பெற்றுக் கொடுத்தனர். ஆட்டநாயகனாக சுரேந்திரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# 75 ஆண்டு நிறைவு கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

17 ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் அணி மோதியது.

இதில் குருநகர் பாடும்மீன் அணி, 02:00 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

பாடும்மீன் அணி சார்பாக சாந்தன், ஹெயின்ஸ் தலா ஒரு கோலை அடித்தனர்.

கடந்த 18 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக் குமரன் அணி மோதியது.

இதில் சென்.நீக்கிலஸ் அணி, 04:00 என்ற அடிப்படையில் வென்றது.

கடந்த 19 ஆம் திகதி நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவிருந்தது. எனினும், பலாலி விண்மீன் அணியினர் போட்டியில் கலந்துகொள்ள மாட்டோம் என அறிவித்திருந்தனர். இதனால், சென். மேரிஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க-26)

# ஆட்ட நாயகனானார் லக்சி அரையிறுதியில் ஆவரங்கால் இந்து




அதிரடி வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியது ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம்.

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழக திருகுமரன்-லஜிதன் ஞாபகார்த்தமாக நடத்தும் வடமாகாண ரீதியான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சிவானந்தா வி.க.மோதியது. ஆரம்பம் முதல் அதிரடி காட்டிய இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் 25:22,25:21,25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் 3:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றது. போட்டியின் சிறந்த வீரராக இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் லக்சி தெரிவு செய்யப்பட்டார். (க)

# ஓல்கோட்ஸ் அணிக்கு முதல் வெற்றி



கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் நடத்தும் "விக்ரம் ராஜன் கங்கு" ஞாபகார்த்த துடுப்பாட்டத் தொடரில் கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியை 12 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ஓல்கோட்ஸ் அணி குழு நிலையில் முதலாவது வெற்றியைப் பதிவு செய்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பல்கலைக் கழக அணி களத்தடுப்பை தெரிவு செய்ய முதலில் ஆடிய ஓல்கோட்ஸ் அணி மதுஷன்-38, பிரியலக்ஷன்-38 ஓட்டங்களின் உதவியுடன் 176 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி சகல விக்கெட்டையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது. ஓல்கோட்ஸ் அணி சார்பாக பிரியலக்ஷன் 4 இலக்குகளை வீழ்த்தினார். (க)

# அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட வலைப்பந்தாட்டத் தொடர் யூனியன் அணி சம்பியன்




அரியாலை சுதேசிய திருநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டத் தொடரில் அராலி ஹொட்ஸ்ரார் அணியினை 26:23 ரீதியில் வீழ்த்தி சம்பியனாகியது தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழகம்.

போட்டியின் ஆட்டநாயகி விருதை யூனியன் அணியின் அபித்தா தெரிவு செய்யப்பட்டார். (க)

## புனர்வாழ்வு அளிக்கும்...

பொருள் தடுப்பு வேலைத்திட்டங்களுடன், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்றின் அவசியத்தை உணர்ந்த ஜனாதிபதி போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான அதிகார சபையை நிறுவுவதற்கான ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

அந்த அதிகார சபையை சட்ட ரீதியாக ஸ்தாபிக்கும் வரை காலந் தாழ்த்தாமல் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இந்த இடைக்கால கட்டுப்பாட்டு சபையை அமைப்பதற்கு நேற்று ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டார்.

சங்கைக்குரிய குப்பியாவத்தே போதானந்த தேரர், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத், போதைப் பொருள்தடுப்பு ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் வைத்தியர் சமந்த கிதலவஆரச்சி, விசேட மனோ வைத்திய நிபுணர் ஜயமால் டி சில்வா, விசேட மனோ வைத்திய நிபுணர் தனுஜ மகேஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரமணி பெரேரா, முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் காமினி ஜயசிங்க, முன்னாள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் இந்த குழுவில் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

நேற்று நண்பகல் இக்குழுவினரை சந்தித்த ஜனாதிபதி ஒழுங்கான கட்டமைப்பின் ஊடாக இந்த சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதன் முக்கியத்துவத்தை தெளிவுபடுத்தினார்.

புதிய தொழிநுட்பமும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வு அளிப்பதற்கு உலகின் முன்னேற்றமடைந்த நாடுகளில் பின்பற்றும் முறைகளை கற்றறிந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்வதன் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்திய ஜனாதிபதி, வட மாகாணத்தை மையமாக கொண்டு அதன் முன்னோடிச் செயற்திட்டங்களை முன்னெடுப்பதன் சாத்தியங்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தினார்.

இந்த அதிகார சபையினூடாக எதிர்காலத்தில் ஜனாதிபதி செயலகம், சுகாதார அமைச்சு, கல்வியமைச்சு மற்றும் பொலிஸார் ஆகிய நிறுவனாங்களுடன் ஒன்றிணைந்து வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குழுவின் கட்டமைப்பு தொடர்பிலான பரிந்துரைகளை எதிர் வரும் இரண்டு வாரங்களுக்குள் தன்னிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் அதிகார சபை துரிதமாக ஸ்தாபிக்கப்படவுள்ளதுடன், இலங்கையில் இவ் அதிகார சபையை நிறுவும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி எதிர்காலங்களில் போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான சட்டங்களை அமுல்படுத்தவுள்ளதாகவும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன இந்நிகழ்வில் கலந்துகொண்டார். (ம-3)

## யாழ்.ஆவரங்காலில் விபத்தில் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி ஆவரங்கால் சிவன் கோவிலுக்கு அருகாமையில் துவிச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று அதிகாலை 5.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

விபத்தில் அல்வாய் தெற்கைச் சேர்ந்த 28 வயதுடைய இ.சோபிகா என்பவர் தலையில் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-10)

## முப்படையின...

இந்த நிகழ்வில் முன்னாள் கடற்படை தளபதி திஸ்ஸர சமரசிங்க, முன்னாள் விமானப்படை தளபதி ரொஷான் குணதிலக்க ஆகியோர் பங்கேற்றனர்.

இதில் மேலும் கருத்துரைத்த தயா ரத்நாயக்க, படையினரில் பலர் கடந்த பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இது படைத்தரப்புக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயலாகும். எனவே அவர்களை தடுத்து வைப்பதை விடுத்து அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருப்பின் சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். (ம-3)

## கால அவகாச...

திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தமக்கு குறித்த தீர்மானத்தை நிறைவேற்ற கால அவகாசத்தை வழங்குமாறு இலங்கை கோரிக்கை விடுக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இலங்கை தொடர்பில் ஆராய பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொண்டெனேகுரோ ஆகிய நாடுகளை உள்ளடங்கிய முக்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த குழுவுடன் இடம்பெறவுள்ள சந்திப்பின் போது இலங்கை வெளிவிவகார அமைச்சு கால நீடிப்பு தொடர்பான தனது கோரிக்கையை முன் வைக்கவுள்ளது.

பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மசிடோனியா, மொண்டெனேகுரோ ஆகிய நாடுகளுடன் இணங்கி செயற்படவுள்ளதாக ஜேர்மனும் அறிவித்துள்ளது.

இந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதன் ஊடாக இலங்கையில் பொறுப்பு கூறல் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை ஊக்குவிக்க முடியும் என ஜேர்மன் தெரிவித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் இணை அனுசரணையில் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் செயற்படுத்தாத் நிலையில், கடந்த 2017ஆம் ஆண்டு இரண்டு வருட கால அவகாசத்தை இலங்கை கோரியது.

ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சிக்காலத்தில் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமென வாக்குறுதி வழங்கப்பட்டது. அதற்கிடையில் தேசிய அரசாங்கம் கலைக்கப்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்காக தீர்வு குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவ்வாறான பின்னணியில்ஐ.நாவின் முக்கிய அறிக்கை வெளியாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கிளி/பளை மத்திய கல்லூரியின் அதிபராக கடமையாற்றி நாளை வெள்ளிக்கிழமை ஓய்வு பெறும் சின்னத்தம்பி பாலகிருஷ்ணனின் சேவைநலன் பாராட்டு விழாவும் பாலாவின் பயணம் மலர் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கிளி/பளை மத்திய கல்லூரியின் பாடசாலை வளாகத்தில் கிளி/பளை மத்திய கல்லூரியின் ஊழியர் நலன்புரிசங்க தலைவர் சி.வதனராசா தலைமையில் இடம் பெறவுள்ளது. (ம-3)

## ஜனாதிபதிக்கு...

போதும், நீதியரசர் தீபாலி விஜேசுந்தரவை மீண்டும் மீண்டும் நியமிக்கும் ஜனாதிபதியின் நடவடிக்கையை சவாலுக்குட்படுத்தியே இந்த மனு தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டவாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் பதவிக்கு அரசியலமைப்பு சபையினால் நிராகரிக்கப்பட்ட நீதியரசர் தீபாலி விஜேசுந்தரவின் பெயரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் மீண்டும் பரிந்துரைத்து வருகிறார்.

மேல்முறையீட்டு நீதிமன்றம், உச்சநீதிமன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் மற்றும் ஏனைய உயர் மட்ட அரச பதவிகளுக்கு அரசியலமைப்பு சபையின் அங்கீகாரத்துடனேயே நியமனங்களை மேற்கொள்ள முடியும்.

எனினும், 14 நாட்கள் வரை பதில் நியமனங்களை ஜனாதிபதியினால் வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## மன்னார் புதைகுழியின் காபன்...

கிடைக்கப் பெற்ற அறிக்கையினை வெளியிட முடியாது எனவும் பீட்டா நிறுவனத்தில் இருந்து மன்னார் நீதிமன்றத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிக்கை கிடைத்தவுடன், வெளியிட முடியும் என மன்னார் நீதவான் ரீ.சரவணராஜா நேற்று புதன்கிழமை தெரிவித்தார்.

மன்னார் மனித எச்சங்களின் காபன் பரிசோதனை அறிக்கை கடந்த 16 ஆம் திகதி அதிகாலை அகழ்வு பணிக்கு பொறுப்பான சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ பீட்டா இணையத்தளத்தில் பிரவேசித்து ஆய்வறிக்கை பெற்றுக் கொண்டுள்ளார்.

மனித எச்சங்களின் 6 மாதிரிகள் மீதான காபன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் 5 மாதிரிகளின் அறிக்கைகள் கடந்த சனிக்கிழமை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையினை சட்ட வைத்திய அதிகாரி நேற்று புதன் கிழமை காலை மன்னார் நீதிமன்றத்தில் கையளித்தார்.

இந்த நிலையில், குறித்த அறிக்கை தொடர்பாக விசாரணைகள் நேற்று புதன் கிழமை மாலை மன்னார் நீதவான் ரீ.சரவணராஜா முன்னிலையில் இடம் பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக மன்றில் ஆஜராகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் ஆகியோர் மன்றில் ஆஜராகி இருந்தனர். இதன் போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதவான் அவ்வாறு தெரிவித்தார். குறித்த நிறுவனத்தினர் மன்னார் நீதிமன்றத்திற்கு காபன் பரிசோதனை அறிக்கையை அனுப்பி வைக்கும் பட்சத்தில் குறித்த அறிக்கைகள் ஒரு பகிரங்க ஆவணமாக காணப்படும் என்பதால் அதனை எவரும் பெற்றுக்கொள்ள முடியும் என நீதவான் மன்றில் தெரிவித்தார்.

இதே வேளை சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஸ ஒரு விண்ணப்பதாரி என்பதனால் காபன் பரிசோதனைக்கான அறிக்கையை பெற்றுள்ளதாகவும், குறித்த அறிக்கையினை உத்தியோக பூர்வமான அறிக்கையாக மன்னார் நீதிமன்றம் கருதவில்லை எனவும், குறித்த அறிக்கை மன்னார் நீதிமன்றத்திற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்பட்டவுடன் அது தொடர்பில் நீதிமன்றத்தினால் அறிவிக்கப்படும் என நீதிபதியினால் மன்றில் தெரிவிக்கப்பட்டதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சார்பாக மன்றில் ஆஜரான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார். நேற்றையதினம் அகழ்வு பணிகள் இடம் பெற்றது. மன்னார் நீதவான் நேரடியாக சென்று அகழ்வு பணிகளை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-10-285)

## கறுப்புப்பட்டி...

ஆயிரம் ரூபாய் என்ற கோரிக்கையை ஆறு மாத காலமாக வைத்துள்ளார்கள். இது அரசியல் பொருளாதார சமூக கலாசாரப் பிரச்சினையாக மாறிக்கொண்டு வருகின்றது.

மலையக மக்களின் வரலாற்றைப் பார்க்கும் போது அவர்கள் நாட்டிற்கு வந்ததும் அவர்களின் வாழ்க்கை முறையைப் பார்க்கின்ற போதும் 150 வருடங்களாக அவர்களது வாழ்க்கையில் தேவையான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளனவா என்பதைப் பார்க்கும் போது கவலையாகவுள்ளது.

ஏனைய தமிழ்பேசும் சமூகங்களை விட அவர்கள் பின் தங்கிய நிலையிலுள்ளார்கள். கல்வி விளையாட்டுத்துறை என்று பார்க்கும் போது மலையக சமூகத்தைப் பார்க்கையில் பின்தங்கியே உள்ளார்கள். இன்று அவர்களது வாழ்வாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது.

அவர்களது இந்தக் கோரிக்கையை காலம் தாழ்த்தாது நிறைவேற்றிக்கொடுக்க வேண்டும். இதில் யார் யார் சம்பந்தப்பட்டுள்ளார்களோ அரசு காணி சொந்தக்காரர்கள் தேயிலை உற்பத்தியாளர்கள் தேயிலை ஏற்றுமதியாளர்கள் என பல குழுக்கள் இருக்கின்றன. இவர்கள் மத்தியில் அரசியல் இருக்கலாம் பொருளாதார நிபுணர்கள் இருக்கலாம். இவர்கள் தேயிலைத் தோட்டத்தில் இருக்கின்ற மக்களுக்கு செவிசாய்க்கவேண்டும்.

இம் மக்களின் போராட்டத்திற்கு சிலர் ஆயிரம் ரூபாய் கொடுத்தால் தாம் நஷ்டம் அடைந்து விடுவோம் என ஊடகங்கள் மூலம் அறியக்கிடைக்கின்றது.

அவ்வாறு கூறுபவர்கள் தமது நிறுவனங்களை இழுத்து மூடி அதனை மக்களிடம் கொடுத்து விட்டு போகலாம்.

இனியும் இதனைப் பார்த்துக்கொண்டு இருக்க முடியாது எனவே மலையக மக்கள் தலைவர்களிடமும் இதற்குப் பொறுப்பான அமைச்சரிடமும் கேட்டுக் கொள்வது தயவுசெய்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்து அவர் களின் கோரிக்கையை நிறைவேற்றுங்கள். (ம-3)

## சட்டத்தரணிகள்...

இவருக்கு ஆதரவாக 4702 வாக்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவருடன் போட்டியிட்ட சட்டத்தரணி மகிந்த லொக்குகே 1346 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய செயலாளராக சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன நேற்று தெரிவாகியுள்ளார். (ம-3)

## தரம் 5 புலமைப்...

புலமைப் பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யும் யோசனைக்கு தான் உடன்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று தெரிவித்துள்ளார். (ம-3)

## குருநகர் பகுதி...

இரண்டு மீனவர்கள் கடலுக்கு சென்றுள்ளனர்.

நெடுந்தீவிற்கு மேற்கே மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தில், படகில் இயந்திரக்கோளாறு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் இருவரும் தொலைபேசி மூலம் குருநகர் மீனவர்களுக்கு அறிவித்துள்ளனர்.

எனினும், குருநகர் மீனவர்கள் காணாமற்போன மீனவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்று பார்த்த போது, அவர்கள் அங்கிருக்கவில்லை.

காணாமற்போன இரண்டு மீனவர்களையும் தேடும் பணிகளை குருநகர் மீனவர்கள் மற்றும் கடற்படையினர் முன்னெடுத்துள்ளனர். (ம-3)

### கொவிசெத

திகதி: 2019.02.20

சீட்டிழுப்பு இலக்கம்: 2041

ஆங்கில எழுத்து: T

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 07 09 19 71

தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி: 20-02-2019

சீட்டிழுப்பு இலக்கம்: 919

ஆங்கில எழுத்து: R

வெற்றி இலக்கங்கள்: 1 3 7 8 0 8

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி: 20/02/2019

சீட்டிழுப்பு இலக்கம்: 347

வெற்றி எழுத்து: J

சுப்பர் இலக்கம்: 03

வெற்றி இலக்கங்கள்: 62 65 66 67

### தன நிதானய

திகதி: 2019/02/20

சீட்டிழுப்பு இலக்கம்: 117

ஆங்கில எழுத்து: N

வெற்றி இலக்கங்கள்: 35 66 70 74

தேசிய லொத்தர் சபை

## தேசிய நிதியம்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

சிறுவர்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக விசேட சமூக ஆய்வறிக்கைகளை பெற்று, சிறுவர்களுக்காக அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் பலமாகவும் துரிதமாகவும் முன்னெடுப்பதற்கு இதன்மூலம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற "சிறுவர்களை பாதுகாப்போம்" தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இன்று ஏற்பட்டிருக்கும் பல்வேறு சமூக சவால்களுக்கு மத்தியில் சிறுவர்களின் பாதுகாப்பு குறித்து விரிவான சமூக கருத்தாய்வொன்று அவசியமாகும் என குறிப்பிட்ட ஜனாதிபதி, இன்றைய சிறுவர் தலைமுறை எதிர்நோக்கியுள்ள சவால்கள் குறித்து அனைத்து துறைகளிலும் விரிவான கலந்துரையாடலுக்கு உட்படுத்துவது இதன் நோக்கமாகும் என்றும் குறிப்பிட்டார்.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற போது பெற்றோர்களுக்கு அது பற்றி அறிவூட்ட வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறுவர் சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் என்ற வகையில் அர்ப்பணிப்புடன் உள்ள அதேநேரம், நாட்டின் சிறுவர் தலைமுறைக்கு அனைத்து கடமைகளையும் நிறைவேற்றுவதற்கு தான் பொறுப்புடன் செயற்படுவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

தேசத்தின் உயிர்நாடியான சிறுவர் தலைமுறையை பாதுகாப்பதற்காக அவர்களது உடல், உள அபிவிருத்திக்கு சிறந்ததோர் சூழலை கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி வழிகாட்டலின் கீழ் ஜனாதிபதி அலுவலகத்தின் முக்கிய திட்டமாக "சிறுவர்களை பாதுகாப்போம்",

தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சமூகத்தில் இன்று பரவியுள்ள பல்வேறு சீரழிவுகளிலிருந்து சிறுவர் தலை முறையை பாதுகாப்பதை முக்கிய தேவையாக கருதி துஷ்பிரயோகங்களை தவிர்த்தல், பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், சுகாதார போசனை நலன்பேணல், ஆளுமை விருத்தி க்ல்வி, வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய துறைகளில் இந்த நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்கீழ் சுகாதாரம், கல்வி, உள வள ஆலோசனை, சட்ட ஆலோசனை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறுவர்களுக்காக நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சிறுவர்களின் ஆளுமை விருத்தி, சுகாதாரம் தொடர்பில் விசேட உரைகள் சிரேஷ்ட உளவள ஆலோசகர் வைத்தியர் சமிந்த வீர சிறிவர்த்தன மற்றும் விசேட வைத்திய நிபுணர் நவாஸ் ஜிப்ரி ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டன.

மேல் மாகாணத்தில் அங்கவீனமுற்ற பிள்ளைகள் உள்ள பாடசாலைகளுக்கு நுழைவாயில்கள் உள்ளிட்ட ஏனைய வசதிகளை வழங்குவதற்கு நிதி ஏற்பாடுகளை வழங்குதல், சிறுவர் இல்லங்களை நவீன மயப்படுத்துவதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்குதல், 05 சிறுவர் பராமரிப்பு அபிவிருத்தி நிலையங்களுக்கு உபகரணங்களை வழங்குதல், பேண்தகு பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் குடிநீர் வசதிகள் இல்லாத பாடசாலைகளுக்கு அந்த தேவைகளை நிறைவேற்றுவதற்காக நிதி ஏற்பாடுகளை வழங்குதல், "நமது பிரச்சினைகளை நாமே தீர்ப்போம்" பாடசாலை மத்தியஸ்த நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 14 மில்லியன் ரூபாய் நிதி ஏற்பாடுகளை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் ஜனாதிபதி தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

மகளிர் மற்றும் சிறுவர் அமைச்சர் சந்திராணி பண்டார, மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, மேல் மாகாண முதலமைச்சர் இசுற தேவப்பிரிய, மாகாண அமைச்சர்களான காமினி திலகசிறி, ரஞ்சித் சோமவங்ச, லலித் வணிகரத்ன ஆகியோரும் கொழும்பு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-3)

## தேர்தலை நடத்து...

களுக்கும் காணப்படுகின்றது என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

ஏக்கல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மாகாண சபைத் தேர்தல் குறித்து எம்மால் மாத்திரம் தீர்மானிக்க முடியாது. அது தொடர்பான தீர்மானம் பாராளுமன்றத்திலேயே எடுக்கப்படும். எனவே பாராளுமன்றத்திலுள்ள 225 உறுப்பினர்களும் இந்த விடயத்தில் பொறுப்புகூற வேண்டியவர்களே. அத்தோடு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற வேண்டிய தினம், முறைமை என்பன குறித்தும் பாராளுமன்றமே தீர்மானிக்க வேண்டும்.

இதே வேளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மாத்திரமே ஜனாதிபதி தேர்தலை முன்னதாகவே நடத்துவது தொடர்பாக தீர்மானிக்கக் கூடிய அதிகாரம் காணப்படுகின்றது. நாட்டில் அனைவருக்கும் கருத்துக்களை வெளியிடக் கூடிய சுதந்திரம் காணப்படுகின்றது. எனினும் அனைவராலும் கூறப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

தற்போது ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அதனால் நாம் மக்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வரும் அதே வேளை 2015 ஆண்டுக்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்களை மக்கள் புறக்கணித்துள்ளனர். இதனாலேயே சிலர் பல பொய் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். அதன் காரணமாகவே ஏதாவதொன்றைச் செய்து 2015க்கு முன்னர் காணப்பட்ட முறைமையை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதனை மக்கள் விரும்பினால் தேர்தலில் அவர்களுக்கு வாக்களிப்பார்கள். (ம-10)


## உடனடி வேலைவாய்ப்பு

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் DNMC நிறுவனத்தின் புதிய கிளைகள் ஆரம்பம். தகைமை: O/L or A/L படித்த ஆண்/பெண் இருபாலாருக்கும் பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

- Customer Service
- Asst. Manager
- Supervisor
- Manager

தங்குமிட வசதிகள் உண்டு. வயதெல்லை 18 - 35

தொடர்புகளுக்கு: 076 459 7725 (7615)

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்) (7570)

## வாகன பாதுகாப்புக் கருவி

முச்சக்கர வண்டி, பேருந்துகளுக்கான ரிமோட் மூலம் இயங்கும் பாதுகாப்பு கருவிகள் உண்டு. வண்டி தரிப்பிடத்தில் அல்லது இரவு வேளை நிறுத்தியுள்ள போது யாராவது உள்ளே நுழையும் வேளை அலாரம் எழுப்பப்படும். அத்துடன் உங்கள் தொலைபேசிக்கு அவசர அழைப்பு உருவாக்கப்படும். இன்னும் பல வசதிகள்...

தொடர்புகளுக்கு:

**077 444 5909** (7612)

## FLC FRENCH LANGUAGE CENTRE



# பிரெஞ்சு

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2. (C-5495)

40, பலாலி வீதி, அரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 05.03.2019, செவ்வாய் 2.15 மணி

181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் :06.03.2019, புதன் 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

## காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தை தெற்குப்புற எல்லையாகக் கொண்ட இரண்டு (2) பரப்பு காணி உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0771839214

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதிக்குள் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 448 6762** (C-5567)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

# af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

**021 222 8093** 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி Hotel ஆன Tilko Jaffna City Hotel ற்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- காசாளர் - (Restaurant Cashier)
- இரவு ஓடிற்றர் - (Night Auditor)
- அறைபராமரிப்பு உதவியாளர் - Housekeeping assistant (Trainee)

அனுபவம் மற்றும் வயதிற்கேற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 077 769 6443 / 077 769 6553 tilko.tilak@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3 - 5 DAYS

- UK - 550 /=Kg
- கனடா - 900 /=Kg
- ஜேர்மனி - 700 /=Kg
- நெதர்லாந்து - 700 /=Kg

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பு

அமரர்

### இராசமாணிக்கம் சிவசுப்பிரமணியம்



தோற்றம்: 09.03.1921 - மறைவு: 03.02.2019

கடந்த 03.02.2019 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராசமாணிக்கம் சிவசுப்பிரமணியம் அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.02.2019) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், சபிண்டீகரண நிகழ்வு நாளை மறுதினம் (23.02.2019) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: தயவுகூர்ந்து இவ் அழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக்கொள்கின்றோம்

பழைய உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை. (சி-5572)

தகவல்: குடும்பத்தினர்.

## Nallur Heritage Rotaract

நல்லூர் பாரம்பரிய றோட்டறக்ட் கழகம் நடத்தும் க.பொ.த உயர்தரம் தோற்றிய மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை - 2019

காலம் : 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 8.00 மணிமுதல் 4.00 மணிவரை

இடம் : நாவலர் கலாசார மண்டபம், நல்லூர்.

- தலைமைத்துவம்
- தொடர்பாடல்
- முகாமைத்துவம்
- அடிப்படைச் சட்டம்

என்பன உள்ளடங்கிய தலைமைத்துவ பயிற்சிப் பட்டறை

வயதெல்லை : 19 - 25

அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விரையுங்கள்! 23.02.2019ற்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுங்கள்

Rtr.வ.கிருசாந்தி- தலைவர் (0770455950)

Rtr.க.மதிப்பிரியன்- செயலாளர் (076257141)

பயற்சியினை பூர்த்தி செய்யும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

அனுமதிக் கட்டணம் : ரூபாய் 200/=


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.